www.Padasalai.Net www.CBSEtips.in

லொயோலா

# ஈசி வணிகவியல்

# 12

புதிய பாடத்திட்டத்தின் படி
விடைக்குறிப்பு (Key) அடிப்படையில்
தயாரிக்கப்பட்ட சிறப்பு நூல்

www.Padasalai.Net

Loyola Publications
Vivek Illam, No. 19, Raj Nagar, N.G.O. 'A' Colony,
Palayamkottai, Tirunelveli - 627 007.
Ph: 0462 - 2553186
Cell : 94433 81701, 94422 69810, 90474 74696
81110 94696, 89400 02320, 89400 02321

₹.290/-

Less Strain Score More ★

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## நூலாக்கம்

 லொயோலா பப்ளிகேஷன்

**Copy right : © LOYOLA PUBLICATION.**

All rights reserved. No part of this publication may be reproduced or distributed in any form or by any means, or stored in a data base or retrieval system without the prior written Permission of the publisher.

www.Padasalai.Net

ஆசிரியர் குழு :

Loyola Publications

★

www.Padasalai.Net www.CBSEtips.in

## உங்களோடு உள்ளன்போடு

- அன்பிற்கினிய மாணவச் செல்வங்களே
- அறிவுசார் ஆசிரியப் பெருந்தகைகளே

**வணக்கமும், வாழ்த்துக்களும்**

- ஈசி வணிகவியல் வழிகாட்டி வாயிலாக தங்களை சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி.
- இவ்வழிகாட்டி 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முழு மதிப்பெண்கள் பெறும் வகையில் எளிய முறையில் மிக நேர்த்தியாக தயாரிக்கப்பட்டுள்ளது.
- அனைத்து பகுதி வினாக்களுக்கும் உரிய விடைகள் மிகச்சிரிய முறையில் அமைக்கப்பட்டுள்ளது. உங்களது படிப்பின் சிரமத்தை நிச்சயம் சரி செய்யும்.
- ஓய்வு நேரங்களில் அட்டவணை, தலைப்புகள், துணைத்தலைப்புகளை மீண்டும் மீண்டும் எழுதிப் பழகுங்கள்.
- உங்களது ஆசிரியரின் வழிகாட்டுதல், உங்களின் கடின உழைப்பு, பெற்றோரின் ஆசி இந்த ஈசி வணிகவியல் வழிகாட்டி மற்றும் இறையருள் உங்களுக்கு முழுமையாய் அமையப் பெற்று தேர்வில் முழு மதிப்பெண் பெற இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.
- PTA வினாத்தாள் மற்றும் அரசுத் தேர்வு வினாத்தாள், அதற்குரிய வினா விடைகள் இடம்பெற்றுள்ளது.
- இந்த வழிகாட்டி மென்மேலும் சிறக்க நல்லோர் அறிஞர்கள், ஆசிரியப் பெருந்தகையினரின் சீரிய கருத்துக்களை அன்புடன் வரவேற்கிறோம்.

நன்றி!

வாழ்க வளமுடன் ...

www.Padasalai.Net

★

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

## பொருளடக்கம்


| அலகு | அத்தியாயம் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| I | 1 | மேலாண்மைச் செயல்முறைகள் | 5 |
| | 2 | மேலாண்மை செயல்பாடுகள் | 16 |
| | 3 | குறியிலக்கு மேலாண்மை மற்றும் விதிவிலக்கு மேலாண்மை | 24 |
| II | 4 | நிதிச் சந்தை – ஓர் அறிமுகம் | 32 |
| | 5 | மூலதனச் சந்தை | 42 |
| | 6 | பணச் சந்தை | 51 |
| III | 7 | பங்கு மாற்றகம் | 64 |
| | 8 | இந்தியப் பத்திர மற்றும் மாற்றகங்களின் வாரியம் (செபி) | 80 |
| IV | 9 | மனித வள மேம்பாட்டின் அடிப்படைகள் | 90 |
| | 10 | ஆட்சேர்ப்பு முறைகள் | 100 |
| | 11 | பணியாளர் தேர்ந்தெடுத்தல் | 110 |
| | 12 | பணியாளர் பயிற்சி முறை | 123 |
| V | 13 | சந்தை மற்றும் சந்தையிடுகையாளர் | 133 |
| | 14 | சந்தையிடுகை மற்றும் சந்தையிடுகையின் கலவை | 143 |
| | 15 | சந்தையிடுதல் நவீன போக்கு | 155 |
| VI | 16 | நுகர்வோரியல் | 166 |
| | 17 | நுகர்வோரின் உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகள் | 176 |
| | 18 | குறை தீர்ப்பு செயல்முறை | 182 |
| VII | 19 | சுற்றுச் சூழல் காரணிகள் | 191 |
| | 20 | தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல், உலகமயமாக்கல் | 200 |
| VIII | 21 | சரக்கு விற்பனைச் சட்டம் 1930 | 205 |
| | 22 | மாற்றுமுறை ஆவணச்சட்டம் 1881 | 214 |
| IX | 23 | தொழில் முனைவுக்கான அடிப்படைக்கூறுகள் | 224 |
| | 24 | தொழில் முனைவோர்களின் வகைகள் | 234 |
| | 25 | தொழில் முனைவோருக்கான அரசின் திட்டங்கள் | 241 |
| X | 26 | நிறுமச் சட்டம், 2013 | 247 |
| | 27 | நிறும மேலாண்மை | 257 |
| | 28 | நிறுமச்செயலர் | 269 |
| பெற்றோர் ஆசிரியர் கழகம் மாதிரி வினாத்தாள் | | | 277 |
| அரசு துணைத் தேர்வு – ஆகஸ்ட் 2021 | | | 290 |
| அரசுத் தேர்வு – மே 2022 | | | 292 |
| அரசு துணைத் தேர்வு – ஆகஸ்ட் 2022 | | | 295 |
| அரசுத் தேர்வு – மார்ச் 2023 | | | 297 |


★

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

அலகு 1

அத்தியாயம் 1

# மேலாண்மைச் செயல்முறைகள்

## பகுதி I - புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

1. **மேலாண்மை என்பது ________ன் செயல் ஆகும்.** PTA - 1 Qy-2019 மே 2022

அ) மேலாளர் ஆ) கீழ்ப்பணியாளர் இ) மேற்பார்வையாளர் ஈ) உயரதிகாரி

**விடை: அ) மேலாளர்**

2. **மேலாண்மை என்பது ஒரு ________.** PTA - 1 GMQ-2019 ஆகஸ்ட் -2021 மார்ச் -2023 ஆகஸ்ட் -2022

அ) கலை ஆ) அறிவியல்

இ) கலை மற்றும் அறிவியல் ஈ) கலை அல்லது அறிவியல்

**விடை: இ) கலை மற்றும் அறிவியல்**

3. **அறிவியல் பூர்வ மேலாண்மை கோட்பாட்டை உருவாக்கி வளர்த்தவர்** PTA - 2 Qy-2019 ஆகஸ்ட் -2021

அ) ஃபோயல் ஆ) டேலர் இ) மேயோ ஈ) ஜேக்கப் **விடை: ஆ) டேலர்**

4. **வேலையை பல்வேறு சிறு பணிகளாக பிரிப்பதை ________ என்பர்.** செப் 2020 மே 2022

அ) ஒழுங்கு ஆ) பயன்பாடு இ) வேலைப் பகிர்வு ஈ) சமத்துவம்

**விடை: இ) வேலைப் பகிர்வு**

5. **பரந்த அளவு வீச்செல்லையில் அதிகாரப்படி நிலைமட்டங்களின் அளவு ________.** PTA - 6

அ) அதிகம் ஆ) குறைவு இ) பன்மடங்கு ஈ) கூடுதல் **விடை: ஆ) குறைவு**

### II. குறு வினாக்கள்

1. **மேலாண்மை என்றால் என்ன?** PTA - 1 Qy - 2019 ஆகஸ்ட் 2022

- மேலாண்மை என்பது ஒரு மேலாளரின் மேலாண்மை செயல்.
- மேலாண்மை என்பது மற்றவர்களின் முயற்சி மற்றும் ஒத்துழைப்புடன் நோக்கங்களை எய்தும் ஒரு கலை மற்றும் அறிவியல்.

2. **மேலாண்மைக் கருவிகளைப் பட்டியலிடுக.** Hy - 2019 மார்ச் 2020 மார்ச் -2023

1) கணக்கியல் 2) வணிகச்சட்டங்கள்
3) உளவியல் 4) புள்ளியியல்
5) பொருளியல் 6) தரவு செயலாக்கம்

3. **அதிகாரம் என்பதன் பொருள் தருக.** PTA - 3 செப் 2020

ஒரு அலுவலர் தன் கீழ் பணியாளருக்கு ஆணையிடும் உரிமையைக் குறிப்பது

4. **மேற்பார்வை வீச்செல்லை என்பதன் பொருள் யாது?** PTA - 2

ஒரு உயர் அலுவலரால் திறமையாக மேலாண்மை செய்யப்படும் கீழ்ப் பணியாளர்களின் எண்ணிக்கையை மேலாண்மையின் வீச்செல்லை ஆகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## III. சிறு வினாக்கள்

**1. மேலாண்மை - வரைவிலக்கணம் தருக.** PTA - 1 ஆகஸ்ட் -2021 ஆகஸ்ட் -2022

➢ "மேலாண்மை என்பது முன் கணிப்பு செய்தல், திட்டமிடல், ஒழுங்கமைப்பது, கட்டளையிடுவது, ஒருங்கிணைப்பது, கட்டுப்படுத்துவது" - ஹென்றி ஃபோயல்

➢ "மேலாண்மை என்பது பன்னோக்கு செயல், அது வியாபாரத்தை மேலாண்மை செய்கிறது. மேலாளரை மேலாண்மை செய்கிறது. மேலும் பணியாளரையும், பணியினையும் மேலாண்மை செய்கிறது"

- பீட்டர் F.டிரக்கர்

**2. மேலாண்மையை நிர்வாகத்திலிருந்து வேறுபடுத்துக. (ஏதேனும் 3)** GMQ-2019 HY-2019 PTA-2 மே 2022

| ஒப்பீட்டின் அடிப்படை | | மேலாண்மை | நிர்வாகம் |
|---|---|---|---|
| 1) | பொருள் | மற்றவர்களின் முயற்சி மற்றும் ஒத்துழைப்புடன் நோக்கங்களை எய்தும் ஒரு கலை. | ஒரு குழுவில் ஒரு நிறுவனத்தை நிர்வகிப்பதற்கான செயல் முறை. |
| 2) | தொடர்பு | கொள்கைகளை செயல்படுத்தல் | கொள்கைகளை வடிவமைத்தல் |
| 3) | முக்கிய நபர் | மேலாளர் | நிர்வாகி |
| 4) | பொருத்தம் | வணிக நிறுவனங்கள் போன்ற இலாபம் ஈட்டுவதை நோக்கமாகக் கொண்ட நிறுவனங்களுக்கு ஏற்றது. | அரசு அலுவலகங்கள், இராணுவம், மன்றங்கள், வணிக நிறுவனங்கள், மருத்துவமனைகள், சமய மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு ஏற்றது. |
| 5) | செயல் | திட்டங்களையும், கொள்கைகளையும் செயல்படுத்தல் | திட்டங்கள் தீட்டுதல், கொள்கையைக் கட்டமைத்தல் மற்றும் இலக்குகளை நிர்ணயித்தல் |
| 6) | முக்கிய நபர் | மேலாளர் | நிர்வாகி |

**3. டேலரின் மேலாண்மைத் தத்துவங்கள் யாவை?** QY - 2019 Sep-2020 மார்ச் -2023

1. அறிவியல், கட்டை விரலின் விதி அல்ல.
2. இணக்கம், சச்சரவின்மை
3. மனப்புரட்சி
4. தனி மனிதத்தத்துவம் அல்ல, ஒத்துழைப்பு
5. ஒவ்வொருவருக்கும் அவரவரது திறமைக்கும் செழிப்புக்குமான வளர்ச்சி.

**4. மேலாண்மையின் வீச்செல்லையை தீர்மானிப்பவை எவை?**

➢ தனிப்பட்ட மேலாளர்களின் பணியில் உள்ள மனோபாவத்தில் செல்வாக்கு செலுத்துவது.

➢ தொழில் நிறுவனத்தின் கட்டமைப்பை தீர்மானிப்பது.

➢ இது பரந்த மற்றும் குறுகிய தன்மை உடையது.

i) பரந்த அளவுள்ள மேலாண்மை பரப்பில் குறைவான அதிகாரப்படிநிலை மட்டங்கள்.

ii) குறுகிய அளவுள்ள மேலாண்மை பரப்பில் மிகுதியான அதிகாரப்படிநிலை மட்டங்கள்.

## IV. பெரு வினாக்கள்

**1. மேலாண்மையின் அடிப்படைக் கருத்துக்களை விவரி. (ஏதேனும் 5)**

➢ மேலாண்மை பயிற்சியியல் என்ற புத்தகத்தில் மேலாண்மையின் கருப்பொருளை விளக்கியுள்ளார்.

➢ பீட்டர் டிரக்கர் மேலாண்மையின் மூன்று முக்கிய பணிகளுக்கு முக்கியத்துவம் தந்துள்ளார்.

i) வணிகத்தை மேலாண்மை செய்தல்

ii) மேலாளரை மேலாண்மை செய்தல்

iii) பணியாளர்களையும், பணியையும் மேலாண்மை செய்தல்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- இந்த பணிகளில் ஏதேனும் ஒன்று விடுபட்டாலும் எவ்வித செயலையும் செய்ய இயலாது.
- ஒரு மேலாளர் மேலாண்மையின் முக்கிய பணிகளையும் திறமையாக சமன் செய்து, ஒருங்கிணைத்து செயல்படுதல் அவசியம்.
- வணிகத்தின் சூழ்நிலைக்கேற்ப மாற்றிக் கொள்ளும் தன்மை கொண்டவராகவும், வியாபரத்திற்கு உயிர் கொடுப்பவராகவும் ஒரு மேலாளர் செயல்படுகிறார்.

**2. நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி. (ஏதேனும் 5)** PTA - 2 | ஆகஸ்ட் -2021 | மே 2022 | ஆகஸ்ட் 2022 | மார்ச் -2023

**1. வேலைப் பகிர்வு:**

- தொழிலமைப்பின் மொத்த பணிச் சுமையும் சிறிய பணிகளாகப் பகிர்வு செய்தல்.
- தொழிலாளியின் திறமைக்கேற்ப பணி ஒதுக்கீடு செய்தல்.
- இதன் மூலம் உற்பத்தி அதிகரிப்பதுடன் தொழிலாளர்களின் உழைப்புச் செயல்திறன் அதிகரித்து நிபுணத்துவத்திற்கு வழி வகுக்கிறது.

**2. அதிகாரமும், பொறுப்பும்:**

- அதிகாரம் என்பது ஒரு அலுவலர் தன் கீழ்ப்பணியாளர்களுக்கு ஆணையிடும் உரிமையைக் குறிக்கின்றது.
- பொறுப்பு என்பது அவ்வாணையினை நிறைவேற்றும் கடமையினைக் குறிக்கின்றது.

**3. ஒழுங்குமுறை:**

- கீழ்ப்படிதல், மற்றவர்களிடம் முறைப்படி நடத்துதல், அதிகாரத்தை மதித்தல் போன்ற ஒழுங்கு முறைகள் நிறுவனம் செம்மையாக நடைபெற இன்றியமையாததாகும்.

**4. கட்டளையொருமை:**

- ஒவ்வொரு கீழ்ப்பணியாளரும் ஒரே ஒரு மேலதிகாரியிடமிருந்து மட்டுமே கட்டளைகளைப் பெறுதல் வேண்டும்.
- அவருக்கு மட்டுமே கட்டுப்படுதல் வேண்டும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட உயர் அதிகாரியிடம் உயர் ஆணைகளைப் பெற்றுச் செயல்பட வேண்டியிருந்தால் அது குழப்பத்தையும், முரண்பாடுகளையும் உருவாக்கிவிடும்.

**5. ஒரு முனை இயக்கம்:**

- அனைத்துத் தொடர்புடைய நடவடிக்கைகளையும் ஒரே குழுவில் வைக்க வேண்டும்.
- இக்குழு ஒரே செயல்திட்டம் மற்றும் ஒரே மேலாளரின் கீழ் பணியாற்ற வேண்டும்.
- பல்வேறு நடவடிக்கைகளுக்கு ஒரே செயல்திட்டம் இல்லாமல் இருக்குமாயின் அந்நோக்கம் நிறைவேறாமல் போகலாம்.

**6. பொது நலனுக்காக தனி நலம் புறக்கணிக்கப்படல் வேண்டும்:**

- நிர்வாகம் தனிப்பட்ட ஆதாயங்களை ஒதுக்கி வைத்து விட்டு நிறுவனத்தின் நோக்கங்களை மட்டுமே முன் நிறுத்த வேண்டும்.
- தனிப்பட்ட நபர்களின் தனிநலனைவிட தொழில் நிறுவனத்தின் நோக்கமே முக்கியமாக செயல்படுதல் வேண்டும்.

**7. ஊதியம்:**

- ஊதியம் என்பது பணியாளர்களின் பணிக்கு கொடுக்கப்படும் விலை.
- ஊதியமே தொழிலாளர்களை ஊக்குவிக்கும் முதன்மை கருவி.
- இது நியாயமானதாகவும், சரியானதாகவும், அவர்களின் முயற்சிக்கு ஏற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

**8. மையப்படுத்தலின் தரம்:**

- தொழில் நிறுவனத்தின் அளவைப் பொறுத்து மைய நிர்வாகத்தின் அதிகாரம் செலுத்தும் நிலை இருக்க வேண்டும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- ➢ முடிவெடுக்கும் அதிகாரம் நிர்வாகத்தின் உயர் மட்டத்தில் குவித்து கிடப்பதையே மையப்படுத்தல் வெளிப்படுத்துகின்றது.

**9. ஆணையுரிமை வரிசை:**

- ➢ ஆணையுரிமையின் வரிசை உயர்மட்ட அலுவலரிடமிருந்து கீழ் மட்டத்தில் உள்ள பணியாளர் வரை படிப்படியாக கீழ்நோக்கி வருவதைக் குறிக்கும்.
- ➢ தெளிவான ஆணையுரிமை வரிசை இருக்கவேண்டும் என்பது இக்கோட்பாட்டின் விளக்கம்.

**10. முறைமை:**

முறைமை என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும். நிறும விதிமுறைகளுக்கு உட்பட்டதாகவும் இருக்க வேண்டும்.

**11. நேர்மை நெறி:**

- ➢ பணியாளர்கள் அன்புடன் நடத்தப்பட வேண்டும் மற்றும் பணியிடத்தில் நீதி முறை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- ➢ அனைத்து பணியாளர்கள் மீதும் சமமான கவனம் செலுத்தப்பட வேண்டும்.

**12. பணியாளர்களின் கால வரையறையின் நிலைத்தன்மை:**

பணியாளர்கள் அடிக்கடி நியமனம் பெறுவதும், வேலையைத் துறந்து விட்டுச் செல்வதும் நிகழக்கூடாது.

**13. தன் முயற்சித்திறன்:**

பணியாளர்களின் தன் முயற்சித்திறனை ஊக்குவிப்பதன் மூலம் தொழில் நிறுவனத்தை பலப்படுத்தவும், புதிய வழிமுறைகளை அறிமுகப்படுத்தவும் முடியும்.

**14. குழு பிணைப்புணர்ச்சி:**

இக்கோட்பாட்டின்படி மேலாளர்கள் பணியிடத்தில் தனித்தனியாகவும், சமூகமாகவும் பணியாளர்க்கிடையில் ஒற்றுமை வளர்ப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

## பகுதி II - GMQ, PTA, அரசுத் தேர்வு வினா விடைகள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

**1. நவீன மேலாண்மையின் தந்தை எனப் போற்றப்படுபவர் ................** HY-2019

அ) திரு. F.W.டேலர் ஆ) திரு. ஹென்றிஃபோயல்

இ) திரு. பீட்டர் F.டிரக்கர் ஈ) திரு. லூயிஸ் A.ஆலன் **விடை : ஆ) திரு. ஹென்றிஃபோயல்**

2. **கூற்று** (A) : மேலாண்மை அறிவு என்பது வேலை வாய்ப்பு உலகில் வெற்றிகரமாக நுழைவதற்கான கடவுச்சீட்டு. செப் 2020

**காரணம்** (R) : மேலாண்மை இலக்கியம் அனைத்து நாடுகளிலும் வளர்ச்சி பெற்றுக் கொண்டு வருகிறது.

அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, மேலும் காரணம் கூற்றுக்கு சரியான விளக்கம்

ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, மேலும் காரணம் என்பது கூற்றுக்கு சரியான விளக்கம் அல்ல,

இ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி

ஈ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

**விடை : அ. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி மேலும் காரணம் கூற்றுக்கு சரியான விளக்கம்**

### II. குறு வினாக்கள்

**1. மேலாண்மை கலையா? அறிவியலா?** PTA - 2

1. மேலாண்மை என்பது ஒரு கலையும் அல்ல, அறிவியலும் அல்ல. இரண்டின் தொகுப்பு.
2. மேலாண்மை என்பது அதன் இயல்பின் அடிப்படையில் ஒரு செயலை செய்வதற்கான கலையோ அல்லது ஒரு செயலை பெறுவதற்கான அறிவியலோ ஆகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## III. பெரு வினாக்கள்

**1. அறிவியல்பூர்வ மேலாண்மையின் கோட்பாடுகள் யாவை?** PTA - 1

**1. அறிவியல், கட்டை விரல் விதி அல்ல:**

- கட்டை விரல் விதிமுறைக்கு பதிலாக அறிவியல்பூர்வ வேலைப் பகுப்பாய்வு மூலம் வளர்ச்சியடைந்த முறைகள் பயன்படுத்துவது.
- கட்டை விரல் விதி என்பது மேலாளர் தனது தனிப்பட்ட தீர்ப்புகள் அடிப்படையில் எடுக்கப்படும் முடிவு.
- இது மனித திறனையும், நேரத்தையும் சேமிக்க உதவும்

**2. இணக்கம், சச்சரவின்மை:**

- மேலாண்மைக்கும், பணியாளர்களுக்கும் மிகச்சிறந்த ஒற்றுமை இருக்க வேண்டும். ஒவ்வொரு முதலாளியும் தனது செழிப்பை தனது பணியாளர்களின் செழிப்பு மூலமே அடைய, எய்த முடியும்.
- நிர்வாகம் தனது உபரியான இலாபத்தை தனது பணியாளர்களுடன் பகிர்ந்து கொள்ள எப்போதும் தயாராக இருப்பது.
- நிர்வாகமும், பணியாளர்களும் ஒருவரை ஒருவர் பரஸ்பரம் சரியாக புரிந்து கொள்வதும், ஒரே குடும்பத்தின் பகுதியாக செயல்படவும் இக்கோட்பாடு உணர்த்துகிறது.

**3. மனப்புரட்சி:**

- நிர்வாகம் மற்றும் பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும் மற்றவரைப் பற்றிய மனோபாவத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவது மனப்புரட்சியின் நுட்பம்.
- நிர்வாகம் மற்றும் பணியாளர்கள் நிறுவனத்தின் இலாபத்தை அதிகரிப்பதே நோக்கமாக இருக்க வேண்டும்.
- தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்திற்கும் இடையே மிகுந்த உணர்வு இருக்க வேண்டும்.

**4. தனி மனிதத்துவமல்ல, ஒத்துழைப்பு:**

- சச்சரவு இன்றி ஒற்றுமை என்ற கோட்பாட்டின் விரிவாக்கம் ஆகும். தொழிலாளர் மற்றும் நிர்வாகத்தின் பரஸ்பர ஒத்துழைப்பின் மீது அழுத்தத்தை ஏற்படுத்துகிறது.
- ஒத்துழைப்பு, பரஸ்பர நம்பிக்கை, நல்லெண்ண உணர்வு ஆகியவை மேலாளர் மற்றும் தொழிலாளர் ஆகிய இருவரிடமும் மேலோங்கி இருக்க வேண்டும்.
- இதன் உள்நோக்கம் அகப்போட்டிகளை ஒத்துழைப்பாக மாற்றுவது.

**5. ஒவ்வொரு நபரும் அவரது மிகச்சிறந்த திறனுடனும் மற்றும் செழிப்புடனும் வளர்ச்சியடைதல்:**

- அறிவியல்பூர்வ முறையில் உரிய பணியாளர்களை தேர்வு செய்ய வேண்டும். தொழிலாளர்களின் உடல் தகுதி, மன மற்றும் அறிவித்திறன் அடிப்படையில் அவர்களுக்கு உரிய பணியினை ஒதுக்க வேண்டும்.
- தொழில் நிறுவனம் அதிக இலாபம் ஈட்ட திறமையான தொழிலாளர்கள் திறம்பட உற்பத்திப் பணிகளை மேற்கொள்வது, இது தொழில் நிறுவனம் மற்றும் தொழிலாளர்கள் தத்தமது திறனையும் செழிப்பையும் அடைவதற்கு உதவி புரிகின்றது.

**2. மேலாண்மைக்கு பீட்டர் டிரக்கரின் பங்களிப்பு யாது?** QY - 2019

- பீட்டா F டிரக்கரின் கூற்றுப்படி, மேலாண்மை என்பது பன்னோக்கு செயல்.
- அது வியாபாரத்தை மேலாண்மை செய்கின்றது, மேலாளரை மேலாண்மை செய்கிறது.
- மேலும் பணியாளரையும் பணியினையும், மேலாண்மை செய்கிறது.
- பீட்டர் டிரக்கர் தனது வரைவிலக்கணத்தில் மேலாண்மையின் மூன்று பணிகளை அழுத்தம் தந்துள்ளார்,

1. வணிகத்தை மேலாண்மை செய்தல்,
2. மேலாளரை மேலாண்மை செய்தல்,
3. பணியாளர்களையும், பணியையும் மேலாண்மை செய்தல்,

- இதில் ஏதேனும் ஒன்று விடுபட்டாலும், எவ்வித செயலையும் மேலாண்மை செய்ய இயலாது. மேலும் வணிக நிறுவனத்தையோ அல்லது தொழில் சமூகத்தையோ நிர்வகிக்க இயலாது.
- பீட்டர் டிரக்கர் என்பவர் கூற்றுப்படி ஒரு மேலாளர் மேற்கூறிய மூன்றையும் திறமையாக சமன் செய்து, ஒருங்கிணைத்து செயல்பட வேண்டும்.
- எனவே ஒவ்வொரு வணிகத்திலும் அதன் மேலாளர் சூழ்நிலைக்கேற்ப மாற்றிக் கொள்ளும் தன்மை கொண்டவராகவும், வியாபாரத்திற்கு உயிர் கொடுப்பவராகவும் செயல்படுகிறார்கள், திறம்பட்ட, செம்மையான மேலாண்மை இல்லாமல், மனித வளங்களையும், பொருட்களையும், நிதி வளங்களையும், திறமையாக ஒதுக்கீடு செய்யவும் மற்றும் முழுமையாகப் பயன்படுத்தவும் இயலாது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி III - கூடுதல் வினாக்கள்

### I. பொருத்துக

1.

| | | | |
|---|---|---|---|
| i | படுக்கை அமைப்பு | a | மேலாண்மைக் கருவி |
| ii | ஊதியம் | b | மேலாண்மை |
| iii | வணிகச் சட்டம் | c | பணியின் விலை |
| iv | மேலாளர் | d | விரிவான வீச்சு |

அ) (i-c), (ii-d), (iii-b), (iv-a)
ஆ) (i-d), (ii-c), (iii-a), (iv-b)
இ) (i-b), (ii-a), (iii-c), (iv-d)
ஈ) (i-c), (ii-d), (iii-a), (iv-b)

**விடை : அ) (i-c), (ii-d), (iii-b), (iv-a)**

2.

| | | | |
|---|---|---|---|
| i | அறிவியல்பூர்வ மேலாண்மை | a | லூயிஸ் A. ஆலன் |
| ii | நவீன மேலாண்மை | b | பீட்டர் F. டிரக்கர் |
| iii | மேலாளர்-மேலாண்மை | c | F.W.டேலர் |
| iv | மேலாண்மை பயிற்சியியல் | d | ஹென்றி ஃபோயல் |

அ) (i-c), (ii-d), (iii-b), (iv-a) ஆ) (i-c), (ii-d), (iii-a), (iv-b)
இ) (i-c), (ii-d), (iii-b), (iv-a) ஈ) (i-a), (ii-d), (iii-b), (iv-c)

**விடை : ஆ) (i-c), (ii-d), (iii-a), (iv-b)**

| II. கோடிட்ட இடங்களை நிரப்புக | விடைகள் |
|---|---|
| 1. ________ என்பது மற்றவர்களின் முயற்சி மற்றும் ஒத்துழைப்புடன் நோக்கங்களை எய்தும் ஒரு கலையாகும். | **மேலாண்மை** |
| 2. 'வாங்குவோர் எச்சரிக்கை' என்ற கோட்பாட்டிற்கு பதிலாக ________ என்ற கோட்பாடு சந்தை நடைமுறையை தீர்மானிக்கிறது. | **விற்பவர் ஜாக்கிரதை** |
| 3. ________ என்பது நபருக்கு நபர், நாடுக்கு நாடு மாறக்கூடியதாகும். | **திறன்** |
| 4. ________ என்பது பணியாளர்களின் பணிக்கு கொடுக்கப்படும் விலையாகும். | **ஊதியம்** |
| 5. அதிகாரப் படிநிலை மட்டங்கள் மிகுந்து இருந்தால் ________ பெருமளவு பாதிக்கப்படும். | **தகவல் தொடர்பு** |

### III. பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடு

1. கணக்கியல், அறிவியல், புள்ளியியல், பொருளியல் **விடை : அறிவியல்**
2. நிர்வாகி, மேலாளர், அமைச்சர், பணியாளர் **விடை : அமைச்சர்**

### IV. தவறான இணையைக் கண்டறி

1. அ) நிர்வாகி - நிர்வாகம்
ஆ) ஊதியம் - பணியாளர்
இ) நிதியியல் -கணக்காளர்
ஈ) மேலாளர் -உரிமையாளர்

**விடை: ஈ) மேலாளர்-உரிமையாளர்**

### V. சரியான இணையைக் கண்டறி

1. அ) நவீன மேலாண்மை - ஹென்றி போயல்
ஆ) மேலாண்மை பயிற்சியியல் - F.W.டேலர்
இ) மேலாண்மை மேலாளர் - பீட்டர் F. டிரக்கர்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



ஈ) அறிவியல்பூர்வ மேலாண்மை -லூயிஸ் A. ஆலன்

**விடை : அ) நவீன மேலாண்மை-ஹென்றி போயல்**

## VI. சரியான கூற்றைக் கண்டறிக

1. அ) மேலாண்மை என்பது வணிக உலகில் நுழைவதற்கான சிறந்த கடவுச்சீட்டு இல்லை.
ஆ) நிர்வாகி என்பவர் நிறுவனத்தை நிர்வகிக்கப் பொறுப்பாகிறார்.
இ) அதிகாரம் என்பது மேலாளர் தன் கீழ்ப்பணியாளர்களுக்கு ஆணையிடும் உரிமை உள்ளது.
ஈ) முதலீட்டின் மூலம் ஆதாயம் பெறும் உரிமையாளர், நிர்வாகி அல்லர்.

**விடை: ஆ) நிர்வாகி என்பவர் நிறுவனத்தை நிர்வகிக்கப் பொறுப்பாகிறார்.**

## VII. தவறான கூற்றைக் கண்டறிக

1. அ) மேலாண்மை என்பது வேலைவாய்ப்பு உலகில் நுழைவதற்கான ஒரு கடவுச்சீட்டு
ஆ) மேலாண்மை என்பது மற்றவர்களின் முயற்சி, ஒத்துழைப்புடன் நோக்கங்களை எய்தும் ஒரு கலை.
இ) மேலாண்மை என்பது செயல்களை அவரவர் பாணியில் நிறைவேற்றும் ஒரு அறிவியல்.
ஈ) மேலாண்மை என்பது ஒரு நுட்பமான அறிவியல்.

**விடை: இ) மேலாண்மை என்பது செயல்களை அவரவர் பாணியில் நிறைவேற்றும் ஒரு அறிவியல்.**

2. அ) நிர்வாகம் என்பது கொள்கைகளை வடிவமைப்பது மற்றும் இலக்குகளை நிர்ணயிப்பது.
ஆ) நிர்வாகம் என்பது வணிக முடிவெடுத்தலைக் குறிப்பது.
இ) நிர்வாகம் என்பது ஒரு குழுவால், நிருவனத்தை நிர்வகிப்பதற்கான ஒரு செயல்முறை.
ஈ) நிர்வாகம் என்பது திட்டங்கள் மற்றும் செயல்களோடு தொடர்புடையது.

**விடை: ஈ) நிர்வாகம் என்பது திட்டங்கள் மற்றும் செயல்களோடு தொடர்புடையது.**

## VIII. பின்வரும் கூற்று - காரணம் கண்டறிந்து சரியான விடைகளைத் தேர்ந்தெடுக்கவும்

1. **கூற்று** (A) : திரு.பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்களது நிர்வாகத் திறமையும், மேலாண்மைத் திறமையும் அவரது மகளான திருமதி.இந்திராகாந்தி அவர்களின் திறன்களோடு ஒப்பிட்டுப் பார்க்க இயலாது.
**காரணம்** (R) : திறன் என்பது நபருக்கு நபர், நாட்டுக்கு நாடு மாறக்கூடியது.
அ) (A) மற்றும் (R) சரியானது மேலும் (A) என்பது (R) ஐ விளக்கவில்லை.
ஆ) (A) மற்றும் (R) சரியானது, (A) ஐ (R) விளக்குகிறது.
இ) (A) சரியானது ஆனால் (R) தவறானது
ஈ) (A) மற்றும் (R) தவறானது

**விடை : ஆ. (A) மற்றும் (R) சரியானது, (A) ஐ (R) விளக்குகிறது.**

2. **கூற்று** (A) : பரந்த அளவுள்ள மேலாண்மை பரப்பில் குறைவான அதிகாரப் படிநிலை மட்டங்கள் இருக்கும்.
**காரணம்** (R) : தொழிலமைப்பின் அடிப்படைக் கூட்டமைப்பு பெயரளவில் இருக்கும். மேலாளர் நியமனம் குறைவாக இருக்கும்.
அ) (A) சரியானது ஆனால் (R) தவறானது
ஆ) (A) மற்றும் (R) சரியானது ஆனால் (R), (A) ஐ விளக்கவில்லை.
இ) (A) மற்றும் (R) சரியானது, (R), (A) ஐ விளக்குகிறது.
ஈ) (A) தவறானது ஆனால் (R) சரியானது

**விடை : அ. (A) சரியானது ஆனால் (R) தவறானது**

## IX. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

**1. யாருடைய மேலாண்மை வரைவிலக்கணம் ஒரு மேலாளர் என்ன செய்ய வேண்டும் என்பதை உணர்த்துகிறது?**

அ) ஹென்றி போயல் ஆ) பீட்டர் F. டிரக்கர்
இ) டேலர் ஈ) எதுவுமில்லை

**விடை : ஆ) பீட்டர் F. டிரக்கர்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



2. **வணிக உலகில் வெற்றிகரமாக நுழைவதற்கு கடவுச் சீட்டு போன்றது எது?**
அ) மேலாண்மை ஆ) நிர்வாகம் இ) திறமை ஈ) உயர்தனிச் சிறப்பு
**விடை : அ) மேலாண்மை**

3. **நவீன மேலாண்மைக் கோட்பாட்டின் தந்தை ________.**
அ) ஹென்றி போயல் ஆ) பீட்டர் F. டிரக்கர்
இ) டேலர் ஈ) லூயிஸ் A. ஆலன்
**விடை : அ) ஹென்றி போயல்**

4. **________ என்பது ஒரு அலுவலர் தன் கீழ்ப்பணியாளர்களுக்கு ஆணையிடும் உரிமையைக் குறிக்கின்றது.**
அ) பொறுப்பு ஆ) மேலாண்மை இ) நிர்வாகம் ஈ) அதிகாரம்
**விடை : ஈ) அதிகாரம்**

5. **கீழ்க்கண்டவற்றுள் நவீன மேலாண்மை கோட்பாடுகள் எது?**
அ) ஊதியம் ஆ) முறைமை இ) நேர்மை நெறி ஈ) இவை அனைத்தும்
**விடை : ஈ) இவை அனைத்தும்**

6. **ஒவ்வொரு முதலாளியும் தனது செழிப்பை தனது ________ செழிப்பு மூலமே அடைய, எய்த முடியும்.**
அ) பணியாளர்களின் ஆ) முதலாளியின்
இ) மேலாளரின் ஈ) நிர்வாகத்தின் **விடை : அ) பணியாளர்களின்**

7. **நிர்வாகம் மற்றும் ஆளுமைப் பணி எதனுடன் தொடர்புடையது?**
அ) நிர்வாகம் ஆ) மேலாண்மை இ) அ மற்றும் ஆ ஈ) நிறுவனம்
**விடை : இ) அ மற்றும் ஆ**

8. **கீழ்க்கண்டவற்றுள் எது நிர்வாகத்தின் பணியாகும்?**
அ) நிர்வாகம் மற்றும் ஆளுமை ஆ) மேலாளர் மற்றும் நிர்வாகி
இ) சட்டம் மற்றும் தீர்மானித்தல் ஈ) இவற்றில் எதுவுமில்லை
**விடை : இ) சட்டம் மற்றும் தீர்மானித்தல்**

9. **________ நிறுவனக் கூட்டமைப்பு என்பது நிறுவனத்தின் சவால்களை சுமத்துகின்றது.**
அ) உயரமான ஆ) குறுகிய இ) செங்குத்தான ஈ) கிடைமட்டம்
**விடை : அ) உயரமான**

10. **உயர்மட்ட நிர்வாகத்திலிருந்து மேற்பார்வைகள் நெடுந்தொலைவு விலகி இருப்பதால் ________ இல்லாமல் போய் விடுகின்றது.**
அ) ஒருங்கிணைத்தல் ஆ) கட்டுப்படுத்துதல்
இ) இவை இரண்டுமல்ல ஈ) (அ) மற்றும் (ஆ) **விடை : ஈ) (அ) மற்றும் (ஆ)**

## X. குறு வினாக்கள்

1. **பீட்டர் எப். டிரக்கர் என்பவரின் மேலாண்மை வரைவிலக்கணம் தருக.**
மேலாண்மை என்பது பன்னோக்கு செயல், அது வியாபாரத்தை மேலாண்மை செய்கின்றது. மேலாளரை மேலாண்மை செய்கிறது. மேலும் பணியாளரையும், பணியினையும் மேலாண்மை செய்கிறது.

2. **வேலை வாய்ப்பு உலகில் நுழைவதற்கு “சிறந்த கடவுச்சீட்டு” எது?**
மேலாண்மை என்பது வணிக உலகம் அல்லது அரசுத்துறை அல்லது தனியார் துறை போன்றவற்றின் வேலை வாய்ப்பு உலகில் வெற்றிகரமாக நுழைவதற்கு சிறந்த கடவுச்சீட்டு.

3. **‘விற்பவர் ஜாக்கிரதை’ - கோட்பாடு எதை தீர்மானிக்கிறது?**
வாங்குவோர் எச்சரிக்கை என்ற கோட்பாட்டிற்கு பதிலாக “விற்பவர் ஜாக்கிரதை” என்ற கோட்பாடு சந்தை நடைமுறைகளை தீர்மானிக்கின்றது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**4. பீட்டர் F. டிரக்கர் கூறும் மேலாண்மையின் மூன்று முக்கிய பணிகளைக் கூறுக.**

1. வணிகத்தை மேலாண்மை செய்தல்.
2. மேலாளரை மேலாண்மை செய்தல்
3. பணியாளர்களையும், பணியையும் மேலாண்மை செய்தல்

**5. நிர்வாகம் என்றால் என்ன?**

- ஒரு குழுவால் ஒரு நிறுவனத்தை நிர்வகிப்பதற்கான செயல்முறையே நிர்வாகம் என்று அழைக்கப்படுகிறது.
- நிறுவனத்தை நிர்வகிப்பவர் நிர்வாகி என்று அழைக்கப்படுகிறார்.

**6. மேலாண்மையில் உள்ள பிரிவுகளைக் கூறுக.**

1. உற்பத்தி
2. சந்தையிடல்
3. நிதி
4. கணக்கியல்
5. விநியோகம்
6. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

**7. மேலாண்மைச் செயல்முறையின் இரட்டை நோக்கங்கள் யாவை?**

1. அதிகபட்ச உற்பத்தித் திறன் அல்லது இலாபம் ஈட்டும் தன்மை.
2. அதிகபட்ச மனித நலம் அல்லது திருப்தி.

**8. மேலாளர் என்பவர் எதை ஒருங்கிணைக்க வேண்டும்? (அல்லது)**
**மேலாளர் ஒருங்கிணைக்க வேண்டிய வளங்கள் யாது?**

ஒரு மேலாளர் என்பவர் அந்நிறுவனத்தின் மனித வளம், இயந்திரங்கள், பொருட்கள் மற்றும் பணம் ஆகிய நான்கு வளங்களையும், அதன் செயல்பாடுகளையும் திறம்பட ஒருங்கிணைக்க வேண்டும்.

**9. திரு.டேலரின் அறிவியல்பூர்வ மேலாண்மைத் தத்துவம் யாது?**

- தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகம் ஆகிய இரண்டுக்குமிடையே மிகப்பெரிய ஒத்துழைப்பு ஏற்படுகின்றது.
- மேலாண்மை நடைமுறைகளின் முன்னேற்றத்திற்கு அறிவியல்பூர்வ மேலாண்மை முக்கிய பங்கு வகிக்கின்றது.

**10. மேற்பார்வை வீச்செல்லையின் இரண்டு அமைப்பினைக் கூறுக.**

விரிவான வீச்சு - படுக்கை அமைப்பு
குறுகலான வீச்சு - செங்குத்து அமைப்பு

**11. முறைமை எப்படி இருக்க வேண்டும்?**

முறைமை என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும், நிறும விதிமுறைகளுக்கு உட்பட்டதாகவும் இருக்க வேண்டும்.

**12. மேலாளர் என்பவர் யார்?**

- ஒரு நிறுவனத்தின் மேலாண்மைப் பணியை ஏற்பவர்.
- ஒரு நிறுவனத்தின் நிர்வாகம் மற்றும் பணி சார்ந்த செயல்பாடுகள் என இரண்டினையும் மேற்கொள்கிறார்.

## XI. சிறு வினாக்கள்

**1. மேலாண்மை அடிப்படைக் கருத்துக்களைக் கூறுக.**

1. அறிவின் தொகுப்பு
2. மேலாண்மைக் கருவிகள்
3. தனிப் பாடப்பிரிவு
4. சிறப்பீடுபாடு
5. நடத்தை விதி
6. பணி ரீதியானதொரு அமைப்பு

**2. மேலாண்மைக்கும், பணியாளர்களுக்கும் இணக்கம் ஏற்படுவதற்கான காரணிகள் யாவை?**

1. இலாப உபரியை பணியாளர்களோடு பகிர்ந்து கொள்ளல்.
2. பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல்
3. வேலைப் பகிர்வு
4. ஒற்றுமை உணர்வு
5. நேர்மறை மனநிலை
6. ஒழுங்குணர்வு
7. நேர்மை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**3. தரவரிசைக் கோட்பாடு என்பதை விளக்குக. (அல்லது) தரவரிசை தொடர் என்றால் என்ன? (அல்லது) ஆணையுரிமை வரிசை என்றால் என்ன?**

ஆணையுரிமையின் வரிசை உயர்மட்ட அலுவலரிடமிருந்து கீழ் மட்டத்தில் உள்ள பணியாளர் வரை படிப்படியாக கீழ்நோக்கி வருவதைக் குறிக்கும்.

உயர் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரை அனைத்து மேலாளர்களையும் அனைத்து மட்டங்களிலும் இணைப்பதன் மூலம் அதிகாரப்பூர்வமான தெளிவான ஒரு ஆணையுரிமை வரிசை இருக்க வேண்டும் என்பதை இக்கோட்பாடு விளக்குகின்றது.

## XII. பெரு வினாக்கள்

**1. மேலாண்மையின் அடிப்படைக் கருத்துக்களை விளக்குக.**

**1. அறிவின் தொகுப்பு:**

➢ தற்போது மேலாண்மை உயர் தனிச்சிறப்பு வாய்ந்த மேலாண்மைக் கோட்பாடு மற்றும் தத்துவத்தை உருவாக்கியுள்ளது.

➢ வணிக உலகம் அல்லது அரசுத்துறை அல்லது தனியார் துறை போன்றவற்றின் வேலை வாய்ப்பு உலகில் வெற்றிகரமாக நுழைவதற்கு சிறந்த கடவுச்சீட்டு போன்றது மேலாண்மை ஆகும்.

**2. மேலாண்மைக் கருவிகள்:**

கணக்கியல், வணிகச் சட்டங்கள், உளவியல், புள்ளியியல், பொருளியல், தரவு செயலாக்கம் என மேலாண்மையின் கிளைகள் பல்கிப் பெருகி விரிவடைந்துள்ளது.

**3. தனிப் பாடப்பிரிவு:**

➢ பல்வேறு பல்கலைக்கழகங்களும், உயர்கல்வி நிறுவனங்களும் மேலாண்மைக் கல்வியை தனிப் பாடப்பிரிவாக அங்கீகரித்திருக்கின்றன.

➢ ஏற்றுமதி மேலாண்மை, ஆள்சார் மேலாண்மை, உற்பத்தி மேலாண்மை, சந்தை மேலாண்மை, நிதி மேலாண்மை போன்ற சிறப்புப் பாடப் பிரிவுகள், பயிற்சித் திட்டங்கள் போன்றவற்றின் மூலம் மேலாண்மை நவீனமயமானதாகவும், பிரபலமடைந்தும் வருகின்றது.

**4. சிறப்பீடுபாடு:**

வணிகத்தின் ஒவ்வொரு செயல்பாட்டுப் பகுதியையும் சீரிய முறையில் மேலாண்மை செய்து வணிகத்தை சிறப்பாக நிர்வகிக்க உயர்கல்வித் தகுதியும், முறையான பயிற்சியும் பெற்ற, உரிய முன்னனுபவமுள்ளவர்களை தேர்ந்தெடுத்து பணியமர்த்த வேண்டும்.

**5. நடத்தை விதி:**

➢ நுகர்வோர் சார்ந்த சந்தைப்படுத்தல் கருத்தாக்கம் என்பது பெரு நிறுவன நடத்தை விதியினையும் பிரதிபலிப்பதாகும்.

➢ நுகர்வோர் இயக்கங்களின் அழுத்தம், தொழிற்சங்க வாதம், பொதுமக்கள் கருத்து மற்றும் சட்டம் ஆகியவை அறம் சார்ந்த விதிகளைத் தோற்றுவித்து மேலாண்மையை வலுவாகத் தூண்டுகிறது.

**6. பணி ரீதியானதொரு அமைப்பு:**

பல்வேறு நாடுகளில் மேலாண்மைப் பிரிவுகளில் அறிவுப் பரவலாக்கம் ஏற்படவும், மேலாண்மை சிறப்புத் தொழில் குறித்து பொதுமக்கள் மனதில் ஒரு சிறந்த தோற்றத்தை உருவாக்கவும் வணிக மேலாண்மை சங்கங்கள் நடவடிக்கை மேற்கொள்கிறது.

**2. மேலாண்மை வீச்செல்லையின் தாக்கங்களை விளக்குக.**

➢ மேலாண்மையின் வீச்செல்லையானது பரந்த மற்றும் குறுகிய தன்மை உடையது.

➢ பரந்த மேலாண்மைப் பரப்பில் குறைவான அதிகாரப் படிநிலை மட்டங்கள் இருக்கும். அமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பு பெயரளவில் இருக்கும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- குறுகிய மேலாண்மைப் பரப்பில் அதிகாரப் படிநிலை மட்டங்கள் மிகுந்து இருக்கும். அமைப்பின் கூட்டமைப்பு உயரமாக இருக்கும்.
- இரண்டு நிறுவன கட்டமைப்புகளும் நன்மைகள் மற்றும் குறைபாடுகளைக் கொண்டது.
- குறுகிய பரப்பில் கீழ்ப்பணியாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளதால், அதிகமான மேலாளர்களை நியமனம் செய்ய வேண்டியுள்ளது.
- அதிகாரப் படிநிலை மட்டங்கள் மிகுந்து இருந்தால் தகவல் தொடர்பு பெருமளவு பாதிக்கப்படும்.
- உயர்மட்ட நிர்வாகத்திலிருந்து மேற்பார்வைகள் நெடுந்தொலைவு விலகி இருப்பதால் ஒருங்கிணைத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் இல்லாமல் போய் விடுகின்றது.
- பரந்த மேலாண்மை வீச்செல்லையில் மேலாளர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு, உயர் அலுவலர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் சேமிக்கப்படுகின்றது.
- இதன் மூலம் சுதந்திரமான சுற்றுச்சூழலில் உற்சாகத்துடன் பணிபுரியும் மனநிலையை வளர்க்கின்றது.

---

**3. மேலாண்மைச் செயல்முறைகளை விரிவாக விளக்குக.**

**1. மேலாண்மை என்பது ஒருங்கிணைத்தல்:**

ஒரு மேலாளர் மனித வளம், இயந்திரங்கள், பொருட்கள் மற்றும் பணம் ஆகிய நான்கு வளங்களையும் அதன் செயல்பாடுகளையும் திறம்பட ஒருங்கிணைத்தல்.

**2. மேலாண்மை ஒரு செயல்முறை:**

ஒரு மேலாளர் திட்டமிடல், ஒழுங்கமைத்தல், பணியமர்த்தல், இயக்குவித்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் வளங்களை திறம்பட ஒருங்கிணைத்து மேலாண்மையை செயல்படுத்துதல்.

**3. மேலாண்மை என்பது ஒரு திட்டமிட்ட செயல்முறை:**

முன்கூட்டியே திட்டமிட்ட நோக்கங்களையும், குறிக்கோள்களையும் அடைவதற்காக இயக்கப்படுதல். மேலாண்மையும், நிறுவனமும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை கொண்டிருக்க வேண்டும்.

**4. மேலாண்மை என்பது ஒரு சமூக செயல்பாடாகும்:**

மற்றவர்கள் மூலம் குறிப்பிட்ட பொருளைப் பெறுவதற்கான கலை ஆகும்.

**5. மேலாண்மை என்பது ஒரு சுழற்சியான செயல்முறை:**

மேலாண்மை - திட்டமிடல் - செயல்பாடு - கட்டுப்படுத்தல் - மறுதிட்டமிடல் ஆகிய சுழற்சியை பிரதிபலித்தல்.

★★★★★



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

அலகு 1

அத்தியாயம் 2

# மேலாண்மை செயல்பாடுகள்

## பகுதி I - புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

1. **மேலாண்மையின் செயல்பாடுகளில் முதன்மையானது எது?** PTA - 3 மார்ச் 2020

அ) புதுமைப்படுத்துதல் ஆ) கட்டுப்படுத்துதல்

இ) திட்டமிடுதல் ஈ) முடிவெடுத்தல் **விடை : இ. திட்டமிடுதல்**

2. **பின்வருவனவற்றுள் எது முக்கிய பணிகள் அல்ல?** PTA - 4 QY-2019 மே 2022

அ) முடிவெடுத்தல் ஆ) திட்டமிடுதல்

இ) ஒழுங்கமைத்தல் ஈ) பணியமர்த்துதல் **விடை : அ. முடிவெடுத்தல்**

3. **______ ல் நிர்வாக செயல்பாடுகளும் உள்ளடங்கியுள்ளது.** ஆகஸ்ட் - 2021

அ) ஒருங்கிணைத்தல் ஆ) கட்டுப்படுத்துதல்

இ) பணியமர்த்துதல் ஈ) ஒழுங்கமைத்தல் **விடை: அ. ஒருங்கிணைத்தல்**

4. **பின்வருவனவற்றுள் எது ஒப்பீடு செய்ய உதவுகிறது?** PTA - 4 HY - 2019 GMQ - 2019 மே 2022

அ) திட்டமிடுதல் ஆ) ஒழுங்கமைத்தல்

இ) பணியமர்த்துதல் ஈ) கட்டுப்படுத்துதல் **விடை : ஈ. கட்டுப்படுத்துல்**

5. **............ ன் உதவியுடன் இலக்குகள் அடையப்படுகின்றன.** மார்ச் -2023

அ) செயலூக்கமளித்தல் ஆ) கட்டுப்படுத்துதல்

இ) திட்டமிடுதல் ஈ) பணியமர்த்துதல் **விடை : அ. செயலூக்கமளித்தல்**

### II. குறு வினாக்கள்

1. **திட்டமிடுதல் என்றால் என்ன?** PTA - 3 QY - 2019
   - ➢ மேலாண்மையின் செயல்பாடுகளில் முதன்மையானது.
   - ➢ வருங்கால தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு ஆக்கப்பூர்வமான மதிப்பீடு.

2. **செயலூக்கமளித்தல் என்பதன் பொருள் தருக.**
   - ➢ செயலூக்கமளித்தல் மூலமே நிறுவனத்தின் நோக்கங்களை அடைய முடியும்.
   - ➢ ஒரு பணியை விரைவாக செய்து முடிப்பதையும், பணியாளர்களின் பணியின் மீதான விருப்பத்தை வளர்ப்பதையும் செயலூக்கமளித்தல்.

3. **மேலாண்மையின் துணைப் பணிகளை பட்டியலிடுக.**

   1. புதுமைப்படுத்துதல் 2. பிரதிநிதித்துவம்

   3. முடிவெடுத்தல் 4. தகவல் தொடர்பு

4. **திட்டமிடுதலுக்கு பயன்படுத்தப்படும் பாரம்பரிய பழமொழி என்ன?**
   - ➢ செயல்படுவதற்கு முன் நீங்கள் சிந்தியுங்கள்
   - ➢ ஆழம் தெரியாமல் காலை விடாதீர்கள்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## III. சிறு வினாக்கள்

1. **மேலாண்மையின் முதன்மைப் பணிகளை பட்டியலிடுக.** QY - 2019 மார்ச் -2023

- திட்டமிடுதல்
- ஒழுங்கமைத்தல்
- பணியமர்த்தல்
- இயக்குவித்தல்
- செயல் விளக்கம் அளித்தல்
- கட்டுப்படுத்துதல்
- ஒருங்கிணைத்தல்

2. **பணியமர்த்தலின் முக்கியத்துவம் பற்றி கூறுக.**

- பணியாளர்களைத் தேர்வு செய்தல் மற்றும் திறமையான பணியாளர்களுக்கு பணியிடமளித்தல்.
- சுருக்கமாக கூறுவதனால், பொருத்தமான நபர்களை பொருத்தமான வேலைக்கு அமர்த்துதல்.
- பணிக்கு பொருத்தமான நபர்களை தேர்ந்தெடுப்பது, தேவையான நபர்களுக்கு பயிற்சி அளிப்பது, சிறந்த நபர்களுக்கு பயிற்சி அளிப்பது, சிறந்த நபர்களுக்கு பதவி உயர்வு அளிப்பது, பழைய நபர்களுக்கு ஓய்வு அளிப்பது போன்றவை.

3. **நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு முக்கியத் தகவல்கள் எவ்வாறு தெரிவிக்கப்படும்?**

சுற்றறிக்கைகள், அறிவுறுத்தல்கள், கையேடுகள், செய்திமடல்கள், அறிவிப்பு பலகைகள், கூட்டம் பங்கேற்பு இயக்கம்.

## IV. பெரு வினாக்கள்

1. **மேலாண்மையின் பல்வேறு பணிகளை விளக்குக. (ஏதேனும் 5)** PTA - 4 செப் 2020 ஆகஸ்ட் - 2021 மே 2022

**1. திட்டமிடுதல்:**

திட்டமிடுதல் என்பது மேலாண்மையின் செயல்பாடுகளில் முதன்மையானது. இது வருங்கால தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஓர் ஆக்கப்பூர்வமான மதிப்பீடு.

**2. ஒழுங்கமைத்தல்:**

ஓர் அமைப்பின் உறுப்பினர்களுக்கு இடையில் இணக்கமான உணவை ஏற்படுத்துவதிலும், ஒரு வலைப்பின்னல் போன்ற அமைப்பை அவர்களது உறவுகளுக்கு இடையில் உருவாக்கும் செயல்முறை.

**3. பணிக்கமர்த்தல்:**

- பணியாளர்களைத் தேர்வு செய்தல் மற்றும் திறமையான பணியாளர்களுக்கு பணியிடமளித்தல் செயல்பாடுகள்.
- சுருக்கமாக கூறுவதானால், பொருத்தமான நபர்களை பொருத்தமான வேலைக்கு அமர்த்தும் செயல்.

**4. இயக்குவித்தல்:**

இலக்குகளை சாதிக்கும் பொருட்டு தொடர்ச்சியான அடிப்படையில் செயலூக்கமளித்தல் முன்னணியிலிருத்தல், வழிகாட்டுதல் மற்றும் கீழ்நிலைப் பணியாளர்களுடன் தொடர்புபடுத்தல்.

**5. கட்டுப்படுத்துதல்:**

ஊக்க ஊதிய உயர்வு மற்றும் பதவி உயர்வு அளிக்கும் முடிவுகளை எடுப்பதும், பணியாளர்களின் செயல் திறனை மதிப்பிடுவதும் கட்டுப்படுத்துதல் செயல்பாடு.

**6. ஒருங்கிணைத்தல்:**

- ஒரு நிறுவனத்தின் அனைத்து தனி நபர்களுடைய திறன்கள் மற்றும் திறனோடு கூடிய செயல்களின் ஒத்திசைவு.
- ஒரு நிறுவனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கான அனைத்து செயல்பாடுகளையும், வளங்களையும் ஒருங்கிணைப்பதாகும். ஒவ்வொரு நிர்வாக செயல்பாடுகளும் ஒருங்கிணைத்தலில் உள்ளடங்கியுள்ளது.

**7. செயலூக்கமளித்தல்:**

செயலூக்கமளித்தல் மூலமே நிறுவனத்தின் நோக்கங்களை அடைய முடியும். ஒரு பணியை விரைவாக செய்து முடிப்பதையும், பணியாளர்களின் பணியின் மீதான விருப்பத்தை வளர்ப்பதையும் செயலூக்கமளித்தல்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி II - GMQ, PTA, அரசுத் தேர்வு வினா விடைகள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

**1. தவறான கூற்று எது?** QY - 2019

அ) பணிக்கு பொருத்தமான நபர்களை மற்றும் தேர்ந்தெடுப்பது பணிக்கமர்த்தல் ஆகும்.
ஆ) ஒரு மேலாளர் நிறுவனத்தின் பிரதிநிதியாக செயல்பட வேண்டும்.
இ) செயலூக்கமளித்தல் மூலமே நிறுவனத்தின் நோக்கங்களை அடைய முடியும்.
ஈ) திட்டமிடுதல் இல்லாமல் எந்தக் காரியமும் செய்ய முடியும்.

**விடை : ஈ. திட்டமிடுதல் இல்லாமல் எந்தக் காரியமும் செய்ய முடியும்**

### II. குறுவினாக்கள்

**1. கட்டுப்படுத்துதல் என்றால் என்ன?** PTA - 4

- ஊக்க ஊதிய உயர்வு மற்றும் பதவி உயர்வு அளிக்கும் முடிவுகளை எடுப்பது.
- பணியாளர்களின் செயல்திறனை மதிப்பிடுவது.
- குறைந்த செயல்திறன் உடையவர்களை அடையாளம் கண்டு, குறைதீர் பயிற்சிகளை வழங்குவது.

### III. சிறுவினாக்கள்

**1. ஊக்குவித்தலின் முக்கியத்துவம் என்ன?** PTA - 3

1. செயலூக்கமளித்தல் மூலமே நிறுவனத்தின் நோக்கங்களை அடைய முடியும்.
2. ஒரு பணியை விரைவாக செய்து முடிப்பதிலும், பணியாளர்களின் பணியின் மீதான விருப்பத்தை வளர்ப்பதிலும் செயலூக்கமளித்தல் பயன்படுகிறது.
3. ஒரு வளமிக்க தலைமையின் கீழ் செயல்படுவதால் மேலாண்மையின் இலக்கை எளிதில் அடைய முடிகிறது.

**2. மேலாளரின் முக்கிய கடமைகள் யாவை?** PTA - 4

- ஓர் அமைப்பின் உறுப்பினர்களுக்கு இடையில் இணக்கமான உணர்வை ஏற்படுத்துவதிலும், ஒரு வலைப்பின்னல் போன்ற அமைப்பை அவர்களது உறவுகளுக்கு இடையில் உருவாக்கும் செயல்முறை.
- பணியாளர்களைத் தேர்வு செய்தல் மற்றும் திறமையான பணியாளர்களுக்கு பணியிடமளித்தல் செயல்பாடுகள்.
- சுருக்கமாக கூறுவதானால், பொருத்தமான நபர்களை பொருத்தமான வேலைக்கு அமர்த்தும் செயல்.
- ஒரு நிறுவனத்தின் அனைத்து தனி நபர்களுடைய திறன்கள் மற்றும் திறனோடு கூடிய செயல்களின் ஒத்திசைவு.

**3. இயக்குதலின் முக்கியத்துவம் என்ன?** QY -2019

- இலக்குகளை சாதிக்கும் பொருட்டு தொடர்ச்சியான அடிப்படையில் செயலூக்கமளித்தல், முன்னணியிலிருத்தல், வழிகாட்டுதல் மற்றும் கீழ்நிலைப் பணியாளர்களுடன் தொடர்புபடுத்துதல் போன்றவற்றிற்கு இயக்குதல் பயன்படுகிறது.
- அமைப்பின் இலக்குகளை நிறைவேற்றுவதற்கு பணியாளர்களை இயக்கும் பொருட்டு சுற்றறிக்கைகள், செய்தி மடல்கள், கூட்டம் ஆகியவற்றின் மூலமாக அனைத்து விபரங்களும், உரிய தகவல்களும் தெரிவிக்கப்படுகின்றன.

## பகுதி III - கூடுதல் வினாக்கள்

### I. பொருத்துக

1.

| | | | |
|---|---|---|---|
| i | திட்டமிடுதல் | a | வியாபார மாற்றங்கள் |
| ii | ஒருங்கிணைத்தல் | b | மனித எண்ணங்கள் பரிமாற்றம் |
| iii | புதுமைப்படுத்துதல் | c | செயல்படுவதற்கு முன் சிந்தியுங்கள் |
| iv | தகவல் தொடர்பு | d | மேலாளர் |
| v | பிரதிநிதித்துவம் | e | அனைத்து செயல்களின் ஒத்திசைவு |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



அ) (i-c), (ii-e), (iii-a), (iv-b), (v-d) ஆ) (i-e), (ii-a), (iii-c), (iv-d), (v-b)
இ) (i-c), (ii-e), (iii-b), (iv-a), (v-d) ஈ) (i-a), (ii-c), (iii-b), (iv-d), (v-e)

**விடை : அ. (i-c), (ii-e), (iii-a), (iv-b), (v-d)**

2.

| | | | |
|---|---|---|---|
| i | இயக்குவித்தல் | a | செயல்திறனை மதிப்பிடுதல் |
| ii | பணியமர்த்தல் | b | பணம் தராத ஊக்குவிப்பு |
| iii | கட்டுப்படுத்துதல் | c | வழிகாட்டுதல் |
| iv | செயலூக்கமளித்தல் | d | பொருத்தமான நபர் - பொருத்தமான வேலை |

அ) (i-c), (ii-d), (iii-a), (iv-b) ஆ) (i-d), (ii-a), (iii-c), (iv-b)
இ) (i-c), (ii-a), (iii-b), (iv-d) ஈ) (i-a), (ii-b), (iii-c), (iv-d)

**விடை : அ) (i-c), (ii-d), (iii-a), (iv-b)**

| II. கோடிட்ட இடங்களை நிரப்புக | விடைகள் |
|---|---|
| 1. பொருத்தமான நபர்களை பொருத்தமான வேலைக்கு அமர்த்தும் செயல் ____. | பணியமர்த்துதல் |
| 2. புதுமைப்படுத்துதல் மூலம் ________ திருப்தி அடைகின்றனர். | நுகர்வோர் |
| 3. ________ என்பது மனித எண்ணங்களை அல்லது கருத்துக்களை நபருக்கு நபர் பரிமாற்றம் செய்வது ஆகும். | தகவல் தொடர்பு |
| 4. ________ மூலமே நிறுவனத்தின் நோக்கங்களை அடைய முடியும். | செயலூக்கமளித்தல் |
| 5. தகவல் தொடர்பு வேலையை ஒழுங்குபடுத்துவதற்கும், நடவடிக்கைகளை ________ உதவுகிறது. | ஒருங்கிணைப்பதற்கும் |

## III. பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடு

1. புதிய தொழில்நுட்பங்கள், புதிய உற்பத்தி, புதிய வடிவம், பிரதிநிதி **விடை : பிரதிநிதி**
2. செய்தி மடல், சுற்றறிக்கை, அறிவிப்பு பலகை, அணுகு முறை **விடை : அணுகு முறை**

## IV. தவறான இணையைக் கண்டறி

1. ஆ) வியாபார மாற்றம் - புதுமைப்படுத்துதல்
ஆ) சிந்தித்து செய் - திட்டமிடுதல்
இ) கருத்துக்கள் பரிமாற்றம் - தகவல் தொடர்பு
ஈ) கூட்டம் - கட்டுப்படுத்துதல் **விடை: ஈ) கூட்டம்-கட்டுப்படுத்துதல்**

2. அ) முதன்மையான செயல்பாடு - திட்டமிடுதல்
ஆ) பிரதிநிதி - முடிவெடுத்தல்
இ) சரியான நபர், சரியான வேலை - பணிக்கமர்த்துதல்
ஈ) வேலை பகிர்வு குழு - ஒருங்கிணைத்தல் **விடை: ஆ) பிரதிநிதி-முடிவெடுத்தல்**

## V. சரியான இணையைக் கண்டறி

1. அ) வழி காட்டுதல் - இயக்குவித்தல்
ஆ) பிரதிநிதி - அலுவலர்
இ) எண்ணம் - முடிவெடுத்தல்
ஈ) புதிய தொழில்நுட்பம் - திட்டமிடுதல் **விடை: அ) வழிகாட்டுதல்-இயக்குவித்தல்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## VI. சரியான கூற்றைக் கண்டறிக

1. அ) திட்டமிடுதல் என்பது மேலாண்மை செயல்பாடுகளில் கடைசியானது.
ஆ) பொருத்தமான நபர்களை பொருத்தமான வேலைக்கு அமர்த்துவது இயக்குவித்தல் ஆகும்,
இ) செயலூக்கமளித்தல் மூலமே நிறுவனத்தின் நோக்கங்களை அடைய முடியும்.
ஈ) ஒருங்கமைத்தல் என்பது மேலாண்மையின் துணைச் செயல்பாடுகளுள் ஒன்று.
**விடை: இ. செயலூக்கமளித்தல் மூலமே நிறுவனத்தின் நோக்கங்களை அடைய முடியும்.**

2. அ) ஒரு அமைப்பு இலகுவாக செயல்படுவதற்கு இயக்குவித்தல் அவசியமாகிறது.
ஆ) ஒரு மேலாளர் வங்கி, நிதி நிறுவனம் போன்றவர்களுடன் நல்ல உறவு வைக்க வேண்டிய தேவையில்லை.
இ) நுகர்வோர் புதுமைப்படுத்துதல் மூலம் திருப்தி அடைகின்றார்.
ஈ) தகவல் தொடர்பு என்பது நிறுவனத்தின் மேலாளர் மற்றும் பணியாளர் தகவலை மாற்றிக் கொள்வதாகும்.
**விடை: இ. நுகர்வோர் புதுமைப்படுத்துதல் மூலம் திருப்தி அடைகின்றார்.**

## VII. தவறான கூற்றைக் கண்டறிக

1. அ) வியாபார உலகின் மாற்றங்களை புதுமைப்படுத்துதல் என்கிறோம்.
ஆ) ஒரு மேலாளர் நிறுவனத்தின் பிரதிநிதியாக செயல்பட வேண்டும்.
இ) ஒரு அமைப்பு இலகுவாக செயல்படுவதற்கு முடிவெடுத்தல் உதவுகிறது.
ஈ) மனித எண்ணங்களை நபருக்கு நபர் பரிமாற்றம் செய்யாததை தகவல் தொடர்பு என்கிறோம்.
**விடை : ஈ. மனித எண்ணங்களை நபருக்கு நபர் பரிமாற்றம் செய்யாததை தகவல் தொடர்பு என்கிறோம்.**

## VIII. பின்வரும் கூற்று - காரணம் கண்டறிந்து சரியான விடைகளைத் தேர்ந்தெடுக்கவும்

1. **கூற்று (A)** : நுகர்வோர் புதுமைப்படுத்துதல் மூலம் திருப்தி அடைகிறார்கள்.
**காரணம் (R)** : வியாபார உலகில் மாற்றங்கள் புதுமைப்படுத்துதல் அவசியமானது.
அ) (A) மற்றும் (R) சரியானது ஆனால் (R), (A) ஐ விளக்கவில்லை.
ஆ) (A) சரியானது ஆனால் (R) தவறானது
இ) (A) தவறானது ஆனால் (R) சரியானது
ஈ) (A) சரியானது, (R), (A) ஐ விளக்குகிறது.
**விடை : அ) (A) மற்றும் (R) சரியானது ஆனால் (R), (A) ஐ விளக்கவில்லை.**

2. **கூற்று (A)** : திட்டமிடுதல் என்பது மேலாண்மை செயல்பாடுகளில் முதன்மையானது.
**காரணம் (R)** : திட்டமிடுதல் எதிர்கால தேவையை பூர்த்தி செய்கிறது.
அ) (A) சரியானது, (R), (A) - ஐ விளக்குகிறது.
ஆ) (A) சரியானது, (R) தவறானது.
இ) (A) தவறானது ஆனால் (R), (A) ஐ விளக்கவில்லை.
ஈ) (A) சரியானது, (R) தவறானது
**விடை : அ) (A) சரியானது, (R), (A) ஐ விளக்குகிறது.**

3. **கூற்று (A)** : பொருத்தமான நபரை பொருத்தமான வேலைக்கு அமர்த்துவது பணிக்கமர்த்துதல்.
**காரணம் (R)** : மருத்துவர் நோயாளிக்கு மருத்துவம் செய்வது.
அ) (A) சரியானது, (R), (A) ஐ விளக்குகிறது.
ஆ) (A) சரியானது, (R), (A) ஐ விளக்கவில்லை.
இ) (A) சரியானது, (R) ம் சரியானது,
ஈ) (A) தவறானது. (R) சரியானது
**விடை : அ) (A) சரியானது, (R), (A) ஐ விளக்குகிறது.**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## IX. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

**1. ____ என்பது எதிர்கால தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு ஆக்கப்பூர்வமான மதிப்பீடு ஆகும்.**

அ) இயக்குவித்தல் ஆ) திட்டமிடுதல்

இ) புதுமைப்படுத்துதல் ஈ) கட்டுப்பாடு காத்தல் **விடை : ஆ) திட்டமிடுதல்**

**2. ஒரு அமைப்பின் உறுப்பினர்களுக்கு இடையே இணக்கமான உறவை ஏற்படுத்தும் வலைப்பின்னல் போன்ற செயல்முறைக்கு ________ என்று பெயர்.**

அ) ஒழுங்கமைத்தல் ஆ) பணிக்கமர்த்துதல்

இ) ஒருங்கிணைத்தல் ஈ) இயக்குவித்தல் **விடை : அ) ஒழுங்கமைத்தல்**

**3. பொருத்தமான நபரை பொருத்தமான வேலைக்கு அமர்த்துவது ________ ஆகும்.**

அ) ஒருங்கிணைத்தல் ஆ) முடிவெடுத்தல்

இ) கட்டுப்பாடு காத்தல் ஈ) பணிக்கமர்த்துதல் **விடை : ஈ) பணிக்கமர்த்துதல்**

**4. அமைப்பின் இலக்குகளை நிறைவேற்றுவதற்கு பணியாளர்களை இயக்குவது ________ மூலம் தகவல் தெரிவிக்கப்படுகிறது.**

அ) ஊதியம் ஆ) சுற்றறிக்கை

இ) (அ) மட்டும் சரி ஈ) (அ) மற்றும் (ஆ) சரி **விடை : ஆ) சுற்றறிக்கை**

**5. அனைத்து தனிநபர்களுடைய செயல்களின் ஒத்திசைவு ________.**

அ) ஒற்றுமை ஆ) ஒருங்கிணைத்தல்

இ) (அ) மற்றும் (ஆ) சரி ஈ) (ஆ) மட்டும் சரி **விடை : இ) (அ) மற்றும் (ஆ) சரி**

**6. பணியாளர்களின் பணியின் மீதான விருப்பத்தை வளர்ப்பதை ________ என்ற சொல் உள்ளடக்கியது.**

அ) கட்டுப்பாடு காத்தல் ஆ) செயலூக்கமளித்தல்

இ) இயக்குவித்தல் ஈ) இவற்றில் எதுவுமில்லை

**விடை : ஆ) செயலூக்கமளித்தல்**

**7. ஒரு நிறுவனத்தில் மற்றவர்களுடன் நல்ல உறவு வைத்திருக்க வேண்டியது ________ கடமையாகும்.**

அ) நிர்வாகியின் ஆ) பணியாளர்களின்

இ) மேலாளரின் ஈ) உரிமையாளரின் **விடை : ஆ) பணியாளர்களின்**

**8. தொடர்பு என்பது ________ ஒரு நபர் மற்றொரு நபருக்கு பரிமாற்றம் செய்வதாகும்.**

அ) மனித எண்ணம் ஆ) மனித கருத்துக்கள்

இ) மனித கண்ணோட்டங்கள் ஈ) இவை அனைத்தும்

**விடை : ஈ) இவை அனைத்தும்**

**9. பின்வருவனவற்றுள் எது மேலாண்மையின் துணைச் செயல்பாடுகள்?**

அ) புதுமைப்படுத்துதல் ஆ) முடிவெடுத்தல்

இ) (அ) மற்றும் (ஆ) சரி ஈ) திட்டமிடுதல் **விடை : இ) (அ) மற்றும் (ஆ) சரி**

**10. ஒரு மேலாளர் கீழ்க்கண்டவற்றுள் எதனுடன் தொடர்பில் இருக்க வேண்டும்?**

அ) வங்கி ஆ) நிதி நிறுவனம்

இ) தொழிற்சங்கம் ஈ) இவை அனைத்தும் **விடை : ஈ) இவை அனைத்தும்**

## X. குறு வினாக்கள்

**1. நிறுவனத்தின் பிரதிநிதியாக செயல்படுபவர் யார்?**

- ஒரு மேலாளர் ஒரு நிறுவனத்தின் பிரதிநிதியாக செயல்பட வேண்டும்.
- மற்றவர்களுடன் நல்ல உறவு வைத்திருக்க வேண்டியது ஒரு மேலாளரின் கடமையாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. "செயல்படுவதற்கு முன் சிந்தியுங்கள்" - இந்த கூற்று எந்த மேலாண்மை செயல்பாட்டுடன் தொடர்புடையது?**

- திட்டமிடுதல் என்ற மேலாண்மை செயல்பாட்டுடன் தொடர்புடையது.
- திட்டமிடுதல் இல்லாமல் எந்த ஒரு காரியமும் செய்ய முடியாது.

**3. புதுமைப்படுத்துதல் உள்ளடக்கியது எது?**

- புதிய தொழில்நுட்பம்
- புதிய முறையில் கட்டுமம் செய்தல்
- புதிய வடிவமைப்பிலான தயாரிப்பு
- செலவு குறைப்பு

ஆகியவற்றை புதுமைப்படுத்துதல் உள்ளடக்கியுள்ளது.

**4. தகவல் தொடர்பு என்பது யாது?**

மனித எண்ணங்களை, கண்ணோட்டங்களை அல்லது கருத்துக்களை ஒரு நபர் மற்றொரு நபருக்கு பரிமாற்றம் செய்வது தகவல் தொடர்பு ஆகும்.

**5. பணியாளர்களை யாரால் கட்டுப்படுத்த முடியும்?**

- பணியாளர்களை ஒரு அமைப்பின் மேலாளரால் கட்டுப்படுத்த முடியும்.
- ஒரு மேலாளர், பணியாளர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு, பதவி உயர்வு, பணியாளர்களின் செயல்திறன் மதிப்பீடு மூலம் கட்டுப்படுத்த முடியும்.

**6. ஒருங்கிணைத்தலின் பொருள் பற்றி நீங்கள் அறிவது என்ன?**

- அனைத்து தனிநபர்களுடைய திறன்களை உள்ளடக்கிய செயல்களின் ஒத்திசைவு ஆகும்.
- ஒரு நிறுவனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அனைத்து செயல்பாடுகளும் ஒருங்கிணைக்கப் படுகின்றன.

**7. மேலாண்மையின் துணை செயல்பாடுகளை பட்டியலிடுக?**

- புதுமைப்படுத்துதல்
- பிரதிநிதித்துவம்
- முடிவெடுத்தல்
- தகவல்தொடர்பு

## XI. சிறு வினாக்கள்

**1. "மாற்றம்" - வியாபார உலகின் மந்திரச் சொல் - விளக்குக.**

- வியாபாரத்தில் தொடர்ச்சியான மாற்றங்கள் நிகழ்கின்றன.
- புதுமைப்படுத்துதல் அல்லது மாற்றங்கள் மூலம் நுகர்வோர்கள் திருப்தி அடைகின்றனர்.
- மாற்றங்கள் மூலம் நிறுவனத்தின் வளர்ச்சியும், இலாபமும் பெருகுகின்றது.

**2. குறிப்பு வரைக: i) அமைத்தல் ii) பணிக்கமர்த்துதல்**

i) **அமைத்தல்:**

பணியாளர்களுக்கு பணிகளை ஒப்படைவு செய்வதும் அப்பணிகளை நிறைவேற்றுவதற்கு போதிய அதிகாரங்களை வழுங்குவதும் மேலும் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு பணியாளரே பொறுப்பேற்க செய்வதும் அமைத்தல் பணி எனப்படுகிறது.

ii) **பணிக்கமர்த்துதல்:**

பணியாளர்களை தேர்வு செய்தல் மற்றும் திறமையான பணியாளர்களுக்கு பணியிடமளித்தல் செயல்பாடுகளை பணிக்கமர்த்துதல் என்றழைக்கிறோம்.

**3. முடிவெடுத்தல் முக்கியமென்று நீங்கள் ஏன் நினைக்கிறீர்கள்?**

- முடிவெடுத்தல் என்பது மேலாண்மையில் ஒரு முக்கியமான பணியாகும்.
- ஒரு அமைப்பின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு ஒவ்வொரு பணியாளரும் பல்வேறு எண்ணிக்கையிலான முடிவுகளை எடுக்கின்றனர்.
- ஒரு அமைப்பு இலகுவாக செயல்படுவதற்கு முடிவெடுத்தல் உதவுகிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**4. தொடர்புபடுத்துதல் செயல்பாட்டின் பங்கு யாது?**

- தொடர்பு என்பது மனித எண்ணங்களை, கண்ணோட்டங்களை அல்லது கருத்துக்களை ஒரு நபர் மற்றொரு நபருக்கு பரிமாற்றம் செய்வது ஆகும்.
- வேலையை ஒழுங்குபடுத்துவதற்கும், நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கும் தொடர்புபடுத்துதல் உதவுகிறது.
- இலக்குகளை எளிதில் அடைவதற்கும் தொடர்புபடுத்துதல் பயன்படுகிறது.

**5. பணியமர்த்தல் என்றால் என்ன?**

- பணியாளர்களைத் தேர்வு செய்தல் மற்றும் திறமையான பணியாளர்களுக்கு பணியிடமளித்தல் செயல்பாடுகள்.
- பொருத்தமான நபர்களை பொருத்தமான வேலைக்கு அமர்த்தும் செயல்.
- நிறுவனத்தின் வெற்றிக்கு காரணியாக உள்ளது.

**6. புதுமைப்படுத்துதல் என்றால் என்ன?**

- வியாபார உலகில் சொல்லப்படும் மாற்றங்களை எதிர்கொள்ள ஊழியர்களையும் அமைப்பையும் தயார் நிலைப்படுத்தும் செயல்பாடு.
- வியாபாரத்தின் தொடர்ச்சியான மாற்றங்கள்.
- புதுமைப்படுத்துதல் மூலம் நுகர்வோர் திருப்தி அடைகின்றனர்.

**7. ஒருங்கிணைத்தல் என்றால் என்ன?**

ஒரு நிறுவனம் தனது குறிக்கோளை அடைவதற்கு பல்வேறு திறன்கள் கொண்ட பணியாளர்களை ஒருங்கிணைப்பது ஒருங்கிணைத்தல் எனப்படும்.

## XII. பெரு வினாக்கள்

**1. மேலாண்மையின் துணை செயல்பாடுகளை விளக்குக.**

**1. புதுமைப்படுத்துதல்:**

- வியாபார உலகில் செய்யப்படும் மாற்றங்களை எதிர்கொள்ள ஊழியர்களையும், அமைப்பையும் தயார்நிலைப் படுத்தும் செயல்பாடு.
- நுகர்வோர்கள் புதுமைப்படுத்துதல் மூலம் திருப்தி அடைகின்றனர்.

**2. பிரதிநிதித்துவம்:**

- ஒரு மேலாளர் ஒரு நிறுவனத்தின் பிரதிநிதியாக செயல்படுகிறார்.
- வாடிக்கையாளர்கள், பொருட்கள் மற்றும் சேவையை அளிப்பவர்கள், அரசாங்க அதிகாரிகள், வங்கிகள், நிதி நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் இதைப் போன்றவர்களுடன் ஒரு மேலாளர் தொடர்புடன் இருக்க வேண்டும்.

**3. முடிவெடுத்தல்:**

- ஒரு அமைப்பின் ஒவ்வொரு பணியாளரும் பல்வேறு எண்ணிக்கையிலான முடிவுகளை ஒவ்வொரு நாளும் எடுக்கின்றனர்.
- ஒரு அமைப்பு இலகுவாக செயல்படுவதற்கு முடிவெடுத்தல் உதவுகிறது.

**4. தகவல் தொடர்பு:**

- தொடர்பு என்பது மனித எண்ணங்களை, கண்ணோட்டங்களை அல்லது கருத்துக்களை ஒரு நபர் மற்றொரு நபருக்கு பரிமாற்றம் செய்வது.
- வேலையை ஒழுங்குபடுத்துவதற்கும், நடவடிக்கையை ஒருங்கிணைப்பதற்கும் தகவல்தொடர்பு உதவுகிறது.

★★★★★



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

அலகு 9

அத்தியாயம் 25

# தொழில் முனைவோருக்கான அரசின் திட்டங்கள்

## பகுதி I - புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. அனைத்து இந்திய அரசாங்கங்களும் மின்னணு முறையில் கிடைக்கச் செய்ய, இந்திய பொருளாதாரத்தை நவீனமயமாக்க -------------- முன் முயற்சி தொடங்கப்பட்டது.**

அ) ஸ்டாண்ட் அப் இந்தியா
ஆ) ஸ்டாட்டப் இந்தியா
இ) டிஜிட்டல் இந்தியா
ஈ) இந்தியாவில் தயாரிப்போம் திட்டம்

**விடை : இ) டிஜிட்டல் இந்தியா**

**2. _____________ இந்தியாவை உலகளாவிய வடிவமைப்பு மற்றும் உற்பத்தி மையமாக மாற்றுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.**

அ) டிஜிட்டல் இந்தியா
ஆ) இந்தியாவில் தயாரிப்போம் திட்டம்
இ) ஸ்டாட்டப் இந்தியா
ஈ) வடிவமைப்பு இந்தியா

**விடை : ஆ) இந்தியாவில் தயாரிப்போம் திட்டம்**

**3. புதிது புனைதல் மற்றும் தொழில் முனைவோர் கலாச்சாரத்தை ஊக்குவிக்க இந்திய அரசு _____________ முயற்சிக்கிறது.**

அ) அடல் புதுமை புகுத்தல் திட்டம் (AIM)
ஆ) பெண்களுக்கு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு திட்டத்திற்கான ஆதரவு (STEP)
இ) விஞ்ஞான அடிப்படையில் அதிகாரமளித்தல் மற்றும் அபிவிருத்தி (SEED)
ஈ) அடல் இன்புவேஷன் சென்டர்ஸ் (AIC)

**விடை:அ) அடல் புதுமை புகுத்தல் திட்டம் (AIM)**

**4. _____________ நிதி ஆதாரங்கள், தொழில் நுட்ப அறிவு, தொழிலாளர் ஆதாரங்கள் மற்றும் மூலப்பொருட்கள், சந்தை திறன் மற்றும் இலாபகத்தன்மை ஆகியவற்றை ஆதாரங்களாகக் கொண்டிருக்கிறது.**

அ) தொழில் நுட்ப அறிக்கை
ஆ) நிதி அறிக்கை
இ) திட்ட அறிக்கை
ஈ) வளர்ச்சி அறிக்கை

**விடை : இ) திட்ட அறிக்கை**

**5. _____________ திட்ட அறிக்கையில் துணிகரம் செய்வதற்கான நெறிமுறையை உள்ளடக்கியது.** PTA - 5 ஆகஸ்ட் - 2022

அ) வங்கியர்
ஆ) அரசு
இ) கடன் அளிக்கும் நிறுவனங்கள்
ஈ) தொழில் முனைவோர்

**விடை : ஈ) தொழில் முனைவோர்**

### II. குறு வினாக்கள்

**1. ஏதேனும் இரண்டு அரசின் தொழில் முனைவோர் திட்டங்களின் பெயர்களை எழுதுக.** PTA - 3 செப் 2020

- ஸ்டாட்டப் இந்தியா (Start Up India)
- இந்தியாவில் தயாரிப்பு திட்டம் (Make in India)
- அடல் புதுமை புகுத்தல் திட்டம் (Atal Innovation Mission)
- பெண்களுக்கான பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு திட்டத்திற்கான ஆதரவு (STEP)
- ஜன்தன் - ஆதார் - மொபைல் (JAM)



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**2. டிஜிட்டல் இந்தியாவைப் பற்றி குறிப்பு வரைக** ஆகஸ்ட் - 2021 | மே 2022

உலகெங்கும் கிடைக்கும் பொருட்கள் மற்றும் பணிகளை மக்கள் மின்னணு முறையில் பெற வகை செய்திடும் அறிவு பொருளாதாரமாக இந்திய பொருளாதாரம் மாறி வருவது டிஜிட்டல் இந்தியா எனப்படும்.

**3. தொழில் முனைவோருக்கு தேவைப்படும் இரண்டு விதமான நிதியைக் குறிப்பிடுக.** ஆகஸ்ட் - 2022

1. நீண்டகால நிதி - நிலையான சொத்துக்களை பெறுவதற்கு
2. குறுகியகால நிதி - நடைமுறை மூலதனத்திற்கு

## III. சிறு வினாக்கள்

**1. ஸ்டாட்டப் இந்தியா என்றால் என்ன?** செப் 2020 | PTA - 3 | மே 2022

- தொடக்க நிலையில் உள்ள தொழில்களுக்கு ஆலோசனை வழங்குவது, வளர்ப்பது, ஆதரவு அளிப்பது போன்ற நடவடிக்கைகள் மூலம் தொழிலை வளர்க்கும் திட்டத்தினை 2016ம் ஆண்டு சனவரியில் துவங்கியது.
- நிதிகளின் நிதி என்ற நிதியின் மூலம் தொடக்க நிலை தொழில் வினைகளுக்கு நிதி வழி செய்து தரப்பட்டு வருகிறது.

**2. பின்வருவனவற்றிற்கு விரிவாக்கம் தருக.**

i) STEP ii) JAM iii) SEED

i) STEP - Support to Trading and Employment Programme for women
பெண்களுக்கான பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு திட்டத்திற்கான ஆதரவு.

ii) JAM - Jan - Dhan - Aadhar - Mobile
ஜன்தன் ஆதார் மொபைல் திட்டம்.

iii) SEED - Science for Equity Empowerment and Development
விஞ்ஞான அடிப்படையில் அதிகாரமளித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.

## IV. பெரு வினாக்கள்

**1. ஏதேனும் ஐந்து அரசின் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தினை விளக்குக.** PTA - 2

**1. ஸ்டாட்டப் இந்தியா :**

- தொடக்க நிலையில் உள்ள தொழில்களுக்கு ஆலோசனை வழங்குவது, தொழிலை வளர்ப்பது, ஆதரவு அளிப்பது போன்ற நடவடிக்கைகள் மூலம் அவற்றை வளர்ப்பதற்காக உருவாக்கப்பட்டது.
- 2016 ஆம் ஆண்டு ஜனவரியில் துவங்கப்பட்டது.

**2. இந்தியாவில் தயாரிப்பு திட்டம் :** மார்ச் -2023

- உலக முழுவதும் உள்ள முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு இந்தியாவை பன்னாட்டு உற்பத்தி மையமாக மாற்ற உதவி செய்ய உருவாக்கப்பட்ட திட்டம்.
- 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**3. அடல் புதுமை புகுத்தல் திட்டம் :**

- புதுமையான பொருட்களை பன்னாட்டு தரத்திற்கு இணக்கமான முறையில் வடிவமைப்பது மற்றும் முழு வீச்சில் தொழில் முனைவை ஊக்குவித்து வளர்ப்பது என்ற முதன்மை நோக்குடன் தொடங்கப்பட்டது.
- தொழில்நுட்பம் அறியப்பட்ட திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

**4. ஜன்தன் - ஆதார் - மொபைல் :**

- பல அரசு திட்டங்களில் பயன் பெற்று வரும் பயனாளிகளுக்கு சேர வேண்டிய மானியத்தை சம்மந்தப்பட்ட துறை நேராக அவர்களது வங்கி கணக்கிற்கு அனுப்ப உருவாக்கப்பட்ட திட்டம்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- ➢ இதன் மூலம் தொழில் முனைவோர் இடைத்தரகர்கள் உதவியின்றி தனக்கு சேர வேண்டிய மானியத்தை பெற முடியும்.

**5. பிரதான் மந்திரி குஷால் விகாஸ் திட்டம் :**

- ➢ தேசிய திறன் வளர்ச்சி மற்றும் தொழில் துறை அமைச்சகம், தொழில் முனைவோரின் ஆற்றல் மற்றும் திறமையை மேம்படுத்த பயிற்சி அளிக்கிறது.
- ➢ பயிற்சிக்குப்பின் தொழில் முனைவோர் சுயமாக தொழில் துவங்கி தன்னை மேம்படுத்திக் கொள்ள இத்திட்டம் உதவுகிறது.

**2. புதிய தொழில் முனைவோர் மேம்பாட்டிற்காக படிநிலைகளை விளக்குக.** செப் 2020

**1. பொருள் தேர்வு :**

திறன் மற்றும் உள்நோக்கம் அடிப்படையில் புதிய பொருளை தேர்ந்தெடுக்கலாம் அல்லது ஏற்கனவே உற்பத்தி செய்து கொண்டிருக்கும் பொருட்களின் தன்மையை மேம்படுத்தி விநியோகிக்கலாம்.

**2. உரிமையின் வடிவத்தை தேர்வு செய்தல் :**

- ➢ குடும்ப உரிமை, கூட்டாண்மை, தனியார் வரம்புக்குட்பட்ட நிறுவனம் ஆகியவற்றிற்கான தொழில்முறை அமைப்பு நிறுவனத்தை தேர்வு செய்ய வேண்டும்.
- ➢ அவை நிறுவனத்தின் மீது ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டை கையாள ஏற்றதாக இருத்தல் வேண்டும்.

**3. இடத்தேர்வு :**

- ➢ தொழில் முனைவோர் தனது முயற்சியை தக்க வைப்பதற்கு பொருத்தமான தொழில் இடத்தை தேர்வு செய்ய வேண்டும்.
- ➢ இடமானது தேர்ந்தெடுக்கப்படும் பொழுது சொந்த ஊருக்கு அருகிலும், அரசாங்கத்தால் ஊக்கம் வழங்கப்படுவது, சந்தைக்கு அருகில், தொழிலாளர் மற்றும் மூலப்பொருள் கிடைக்கும் தன்மை உள்கட்டமைப்பு வசதி ஆகியவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

**4. மூலதன கட்டமைப்பை தீர்மானித்தல் :**

தொழில் முனைவோர் தனது தொழிலுக்கு தேவையான முதலை எங்கிருந்து எவ்வாறு திரட்ட வேண்டும் என்பதை தீர்மானிக்க வேண்டும்.

**5. உற்பத்தியை கையகப்படுத்துதல் என்பதை அறிதல் :**

தொழில்துறை ஆய்வுக்கூடங்கள், ஆராய்ச்சி மற்றும் தொழில்துறை மேம்பாட்டு பிரிவுகள் மற்றும் தனிப்பட்ட ஆலோசகரிடமிருந்து உற்பத்தி செய்வது பற்றிய ஆலோசனைகளை கேட்டறிதல்.

**6. திட்ட அறிக்கை தயாரித்தல் :**

நிதியியல், தொழில்நுட்ப அறிவு, உழைப்பு மற்றும் மூலப்பொருட்களின் ஆதாரங்கள் சந்தைதிறன் மற்றும் இலாபத்தன்மை போன்ற அம்சங்களை உள்ளடக்கிய திட்ட அறிக்கையை தயாரிக்க வேண்டும்.

**7. தற்காலிகமான பதிவு சான்றிதழ் பெறுதல் :**

தற்காலிகமான பதிவு சான்றிதழுக்கு விண்ணப்பிக்க வேண்டும். தொழில் முனைவோர் சில நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் ஒரு வருட காலத்திற்கு ஆறு மாதத்திற்கு ஒருமுறை புதுப்பிக்கும் வண்ணம் தரப்படும்.

**8. நிரந்தர பதிவு சான்று பெறுதல் :**

உற்பத்தி தொடங்க தயாரானவுடன் அல்லது ஆரம்பித்த உடன் பதிவு சான்றிதழை பெற தகுதியுடையவராகிறார்.

**9. சட்டப்பூர்வ உரிமம் :**

- ➢ நகராட்சி உரிமம் சம்மந்தப்பட்ட அதிகாரியிடம் பெற வேண்டும்.
- ➢ உற்பத்தி அலகை மத்திய மற்றும் விற்பனை வரித்துறையிடம் பதிவு செய்ய வேண்டும்.
- ➢ ஒரு அலகு தொழிற்சாலை சட்டத்தின் விதிமுறைகளுக்குள் வந்தால் அதை தொழிற்சாலை கண்காணிப்பாளர் அல்லது ஸ்தாபன சட்டத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**10. மின் இணைப்பு :**

மின் இணைப்பிற்கான வைப்புத்தொகையை செலுத்தி, அலுவலக முறைமைகளை நிறைவேற்றி மாநில மின்சார வாரியத்தின் கோட்ட பொறியாளரிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

**11. நிதி ஏற்பாடு :**

- தொழில் முனைவோருக்கு நீண்டகால மற்றும் குறுகிய கால நிதி என இரண்டு நிதி தேவைப்படுகிறது.
- நிலையான சொத்துகளை பெற - நீண்டகால நிதி
  நடைமுறை மூலதனத்திற்கு - குறுகிய கால நிதி
- நிதி நிறுவனங்களால் பரிந்துரைக்கப்பட்ட தொடக்க மூலதனத்தை கொண்டு வர வேண்டும்.

## பகுதி II - GMQ, PTA, அரசுத் தேர்வு வினா விடைகள்

### I. சிறு வினாக்கள்

**1. எழுந்திரு இந்தியா என்றால் என்ன?** PTA - 3

- பழங்குடியினர் மற்றும் தாழ்த்தப்பட்ட இனத்தை சார்ந்த மகளிருக்கு கடன் வழங்கி, அவர்களும் இந்திய பொருளாதாரத்தின் பலனை அனுபவிக்க வகை செய்யும் நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட திட்டம் எழுந்திரு இந்தியா.
- இத்திட்டத்தின் மூலம் ₹10 இலட்சம் முதல் ₹1 கோடி வரை மகளிர்க்கு கடன் வழங்கப்படுகிறது.
- கடன் வாங்கப்படும் மகளிர் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி சமூகத்தை சேர்ந்தவராக இருக்க வேண்டும்.

**2. திட்ட அறிக்கை குறிப்பு வரைக:** PTA - 5

நிதியியல், தொழில்நுட்ப அறிவு, உழைப்பு மற்றும் மூலப் பொருட்களின் ஆதாரங்கள், சந்தை திறன் மற்றும் இலாபத்தன்மை போன்ற அம்சங்களை உள்ளடக்கிய அறிக்கை.

**3. தமிழக அரசின் தொழில் முனைவோர் திட்டங்களில் ஏதேனும் மூன்றினை எழுதுக,** PTA - 4

(i) வேலையில்லா வேலைவாய்ப்பு திட்டம்.
(ii) தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்
(iii) புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் துணிவு வளர்ச்சி திட்டம்
(iv) தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி லிமிடெட்

**4. ஒரு தொழில் முனைவோர் தம்முடைய நிறுவனத்திற்கு மின் இணைப்பு பெறுவதற்கான வழிமுறைகள் யாவை?** PTA - 4

மின் இணைப்பிற்கான வைப்புத்தொகையை செலுத்தி, அலுவலக முறைமைகளை நிறைவேற்றி மாநில மின்சார வாரியத்தின் கோட்ட பொறியாளரிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

## பகுதி - III கூடுதல் வினாக்கள்

### I. பொருத்துக

| பட்டியல் I - உதவியின் அளவு | | பட்டியல் II - திட்டங்கள் | |
|---|---|---|---|
| i | 1 இலட்சம் - 10 இலட்சம் | 1 | புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் துணிவு வளர்ச்சி திட்டம் |
| ii | ₹50,000 - ₹5,00,000 | 2 | பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகம் |
| iii | செயல் திட்ட மதிப்பில் ₹25,00,000 | 3 | வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் |
| iv | ₹15,000 - ₹30,000 | 4 | தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம் |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



| | i) | ii) | iii) | iv) |
|---|---|---|---|---|
| அ) | 3 | 4 | 1 | 2 |
| ஆ) | 3 | 4 | 2 | 1 |
| இ) | 4 | 3 | 1 | 2 |
| ஈ) | 1 | 2 | 3 | 4 |

**விடை : அ) 3 4 1 2**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. _______ என்பது இந்தியா எதிர்கொள்ளும் முன்னணி சவாலாகும். **விடை : வேலை உருவாக்கம்**

2. அடல் இன்புவேசன் சென்டர்ஸ் ____________ ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. **விடை : 2016**

## III. சரியான விடையைத் தேர்ந்தெடு

1. **பொருந்தாத இணையை தெரிவு செய்க.**
   - அ) பதிவு சான்றிதழ் - ஆறுமாதத்திற்கு ஒரு முறை புதுப்பித்தல்
   - ஆ) மேல்நிலை செலவு - திரும்ப நிகழும் செலவு
   - இ) இயந்திர செலவு - திரும்ப நிகழா செலவு
   - ஈ) திருத்தப்பட்ட சிறப்பு ஊக்க தொகுப்பு திட்டம் - SEZ 25% மானியம்

   **விடை : ஈ) திருத்தப்பட்ட சிறப்பு ஊக்க தொகுப்பு திட்டம் - SEZ 25% மானியம்**

2. **கீழ்கண்டவற்றுள் பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க.**
   அ) சம்பளச் செலவு ஆ) நிலம், கட்டிட செலவு
   இ) ஆலை செலவு ஈ) இயந்திர செலவு **விடை : அ) சம்பளச் செலவு**

3. **சிறப்பு பொருளாதார மண்டலம் அல்லாத பகுதிகளுக்கு 25 சதவீதம் மானியத்தை வழங்கும் திட்டம் ____________**
   அ) ஒற்றை புள்ளி பதிவு திட்டம் ஆ) அடல் இன்புவேசன் சென்டர்ஸ்
   இ) திருத்தப்பட்ட சிறப்பு ஊக்க தொகுப்பு திட்டம் ஈ) பால் பண்ணை தொழில் முனைவு
   **விடை : இ) திருத்தப்பட்ட சிறப்பு ஊக்க தொகுப்பு திட்டம்**

4. **தேசிய திறன் அபிவிருத்தி குறிக்கோள் திட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு**
   அ) 2014 ஆ) 2015 இ) 2016 ஈ) 2017 **விடை : ஆ) 2015**

## IV. குறு வினாக்கள்

1. **தொழிற் கொள்கைகளை உருவாக்குவதன் நோக்கம் யாது?**
   - நாட்டில் புதுமையை புகுத்துதல்
   - தொழில் முனைவை வளர்த்தல்

2. **புதிய தொழில் நிறுவனங்கள் அமைக்க தொழில் முனைவோருக்கு வழங்கப்படுவதை பட்டியலிடுக.**
   i) நிதி உதவி ii) காப்பீடு iii) மானியம் iv) பயிற்சி v) தொழில் தொடங்க ஆரம்பநிலை தொழில்நுட்பம் vi) வணிக கடன்கள் vii) சிறப்பு ஊக்கம்

3. **ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டத்தின் கீழ் அனைத்து மகளிரும் நிதியுதவி பெற முடியுமா?**
   - தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மகளிர் மட்டுமே ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டத்தின் கீழ் பயன் பெற முடியும்.
   - நிதி வசதி 10 லட்சம் முதல் 1 கோடி வழங்கப்படுகிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## V. சிறு வினாக்கள்

**1. விஞ்ஞான அடிப்படையில் அதிகாரமளித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் திட்டம் பற்றி கூறுக.**

- களப்பணியாளர்கள் மற்றும் செயலாக்கம் அளிக்கப்பட்ட அறிவியல் ஆராய்ச்சியாளர்களால் கிராமப்புறங்களில் ஆரம்பிக்க சமூக பொருளாதார நோக்கம் கொண்ட செயல்திட்டம்.
- கீழ்நாட்டிலுள்ள நலிவுற்ற பிரிவு மக்களுக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியின் பலன்களை கிடைக்கச் செய்வது இதன் நோக்கம்.

**2. தொழில் முனைவோர் தனது இடத்தை தேர்வு செய்ய உள்ள நான்கு வாய்ப்புகளை கூறுக.**

i) சிறு தொழில்துறை மேம்பாட்டு கழகம், தமிழ்நாடு மாநில தொழில்துறை மேம்பாட்டு கழகம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், இவற்றில் தொழில்துறை இயக்குனரகம் இடமளிக்கலாம்.

ii) தொழிற்சாலை கொட்டகை கட்ட மாநில தொழில்துறை மேம்பாட்டு முகமைத்துவத்தால் உதவி செய்யப்படலாம்.

iii) தனியார் நில மேம்பாட்டாளரால் அளிக்கப்பட்ட இடத்தில் தொழில் தொடங்கலாம்.

iv) தனியார் நிலத்தை வாங்கி தொழில் முனைவோர் அதை தொழில்துறை பயன்பாட்டிற்காக உருவாக்கலாம்.

**3. தொழில் முனைவோருக்கு தேவைப்படும் நிதிகளை கூறுக.**

i) நீண்டகால நிதி - நிலையான சொத்துக்களை பெற தேவை.

ii) குறுகிய கால நிதி - நடைமுறை செலவுகளை சமாளிக்க தேவை.

**4. திரும்ப திரும்ப நிகழும் மற்றும் நிகழா செலவுகளுக்கு எகா தருக.**

i) திரும்ப திரும்ப நிகழும் செலவு - இயந்திரம், நிலம், கட்டடம் மற்றும் ஆலை செலவு.

ii) திரும்ப திரும்ப நிகழா செலவு - கூலி, சம்பளம் மற்றும் மேல்நிலை செலவு.

**5. சிறு குறிப்பு வரைக.**

**பால் பொருள் உற்பத்தி தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம்**

**1. பால்பண்ணை தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம் :**
விவசாயம், செல்லப்பிராணிகள், விலங்குகள் மற்றும் சிறிய பால்பண்ணைகளை உருவாக்கும் செயல்திட்டங்களுக்கும் மற்றும் அதற்கான கருவிகளை வாங்க நிதி உதவி அளிப்பது.

★★★★★



www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



15. இயக்குநர்கள் நிறுமத்தின் பணத்திற்கு ____________ ஆகிறார்கள்.
(அ) வங்கியாளர்கள் (ஆ) பங்குதாரர்கள்
(இ) முகவர்கள் **(ஈ) பொறுப்பாண்மையாளர்கள்**

16. ____________ கூட்டம் நிறுமத்தின் வாழ்நாளில் ஒரு முறை மட்டுமே கூட்டப்படும்.
**(அ) சட்டமுறை** (ஆ) ஆண்டுப்பொது (இ) சிறப்பு (ஈ) வகுப்பு

17. முதல் நிலைச் சந்தை என்பது பத்திரங்களை / பிணையங்களை ________ வியாபாரம் செய்யும் ஒரு சந்தை ஆகும்.
**(அ) முதன் முறை** (ஆ) இரண்டாம் முறை (இ) மூன்றாம் முறை (ஈ) பலமுறை

18. பணச் சந்தையில் முக்கிய பங்காற்றும் அமைப்பு ____________
**(அ) வணிக வங்கி** (ஆ) இந்திய ரிசர்வ் வங்கி (இ) பாரத ஸ்டேட் வங்கி (ஈ) கூட்டுறவு வங்கி

19. சந்தையிடுகை முறையின் ஆரம்ப நிலை ____________
(அ) முற்றுரிமை முறை (ஆ) பணத்திற்கு மாற்றுதல் **(இ) பண்டமாற்று முறை** (ஈ) தற்சார்பு உற்பத்தி

20. சரக்கு விற்பனைச் சட்டத்தில் எது சரக்கு என்ற பொருளில் உள்ளடங்காதது?
(அ) சரக்கிருப்பு **(ஆ) வரவேண்டிய பங்காதாயம்**
(இ) பயிர் (ஈ) தண்ணீர்

## பகுதி - II

**குறிப்பு:** ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அதில் 30 -வது வினாவிற்கு **கட்டாயம்** விடையளிக்க வேண்டும். **7×2=14**

21. அதிகாரம் என்பதன் பொருள் தருக. அத்தியாயம் - 1
22. மூலதனச் சந்தை என்றால் என்ன? அத்தியாயம் - 5
23. தரகர் என்று யார் அழைக்கப்படுகிறார்? அத்தியாயம் - 7
24. மனித வள மேலாண்மையின் முக்கியத்துவம் ஏதேனும் இரண்டினை பற்றி எழுதுக. அத்தியாயம் - 9
25. தேர்ந்தெடுத்தல் என்றால் என்ன? அத்தியாயம் - 11
26. மறைமுகச் சந்தையிடுதல் என்றால் என்ன? அத்தியாயம் - 10
27. வணிகத்தின் முதன்மை நோக்கங்கள் யாவை? அத்தியாயம் - 17
28. தனியார்மயமாக்கல் என்றால் என்ன? அத்தியாயம் - 20
29. தொழில்முனைவோர்க்குத் தேவைப்படும் இரண்டு நிதியைக் குறிப்பிடுக. அத்தியாயம் - 25
30. தள்ளுபடியில் பங்குகளை வெளியிடுதல் என்றால் என்ன? அத்தியாயம் - 26

## பகுதி - III

**குறிப்பு :** ஏதேனும் **ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 -க்கு கட்டாயம் விடையளிக்கவும். **7×3=21**

31. 'மேலாண்மை' - வரைவிலக்கணம் தருக. அத்தியாயம் - 1
32. நிதிச் சந்தையின் பொருள் தருக. அத்தியாயம் - 4
33. 'காளை மற்றும் கரடி' - விளக்குக. அத்தியாயம் - 7
34. மனித வளங்களின் சிறப்பு இயல்புகள் எவையேனும் ஆறினை எழுதுக. அத்தியாயம் - 9
35. வேலைவாய்ப்பு இணையதளங்கள் என்றால் என்ன? அத்தியாயம் - 10
36. காலத்தின் அடிப்படையில் சந்தையை எப்படி வகைப்படுத்துவாய்? அத்தியாயம் - 18
37. மின் சந்தையிடுதலின் நோக்கங்கள் யாவை? அத்தியாயம் - 15
38. உரிமை மாற்றத்தின் பாய்வுப் படம் வரைக. அத்தியாயம் - 21
39. தொழில்முனைவோர் மற்றும் மேலாளருக்கிடையே யுள்ள வேறுபாடுகள் எவையேனும் மூன்றினை எழுதுக. அத்தியாயம் - 23
40. முழு நேர இயக்குநர் என்பவர் யார்? அத்தியாயம் - 27

## பகுதி - IV

**குறிப்பு :** **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7×5=35**

41. (அ) நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரிக்கவும். அத்தியாயம் - 1



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**அல்லது**

(ஆ) பணச் சந்தையின் சிறப்பியல்புகளை விவரிக்கவும். அத்தியாயம் - 6

42. (அ) முதல்நிலைச் சந்தை மற்றும் இரண்டாம் நிலைச் சந்தைக்கு இடையிலான வேறுபாடுகளை விவரிக்கவும். அத்தியாயம் - 4

**அல்லது**

(ஆ) பலவகையான நிறுமக் கூட்டங்களை விவரிக்கவும். அத்தியாயம் - 28

43. (அ) ஆள்சேர்ப்பு முறையில் உள்ள அகவளங்களை விளக்குக. அத்தியாயம் - 10

**அல்லது**

(ஆ) பங்குகளுக்கும் கடனீட்டுப் பத்திரங்களுக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக. அத்தியாயம் - 26

44. (அ) பல்வேறு வகையான சோதனைகளை விளக்குக. அத்தியாயம் - 11

**அல்லது**

(ஆ) மகளிர் தொழில்முனைவோர் சந்திக்கும் பிரச்சனைகளை விவரிக்கவும். அத்தியாயம் - 23

45. (அ) சந்தை எவ்வாறு வகைப்படுத்தபடுகிறது? விவரிக்கவும். அத்தியாயம் - 13

**அல்லது**

(ஆ) தாராளமயமாக்கலின் நன்மை தீமைகளை விவரிக்கவும். அத்தியாயம் - 20

46. (அ) நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்? அத்தியாயம் - 16

**அல்லது**

(ஆ) பங்குச் சந்தையின் தன்மைகளை விவரிக்கவும். அத்தியாயம் - 7

47. (அ) நுகர்வோரின் கடமைகளை விளக்குக. அத்தியாயம் - 17

**அல்லது**

(ஆ) விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படை கூறுகளை கூறி விளக்குக. அத்தியாயம் - 21

## அரசு பொதுத் தேர்வு - மார்ச் 2023

**12 - வணிகவியல்**

**[கால அளவு : 3.00 மணி நேரம்]** **[மொத்த மதிப்பெண்கள் : 90]**

**பகுதி - I**

**குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**
**ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.** **20 x 1 = 20**

1. யார் ஒருவர் நிறுமத்தின் செயலாளராக முடியும்?
அ) கூட்டுறவு சங்கம் **ஆ) தனி நபர்** இ) தொழிற்சங்கம் ஈ) கூட்டாண்மை நிறுமம்

2. மனித வளம் என்பது ஒரு ______ சொத்து.
அ) நிலையான ஆ) கண்ணுக்குப் புலனாகும்
இ) நடப்பு **ஈ) கண்ணுக்குப் புலனாகா**

3. பொது நிறுமம் குறைந்தபட்சம் _______ இயக்குநர்களைக் கொண்டிருக்க வேண்டும்.
அ) 5 ஆ) 2 இ) 6 **ஈ) 3**

4. பணச் சந்தையில் முக்கிய பங்காற்றும் அமைப்பு:
அ) பாரத ஸ்டேட் வங்கி **ஆ) வணிக வங்கி** இ) மைய வங்கி ஈ) இந்திய ரிசர்வ் வங்கி

5. கீழ்கொடுக்கப்பட்டுள்ள கூறுகளில் சந்தையிடுகை கலவைக்கு தொடர்பு இல்லாத ஒரு கூறு எது?
**அ) திட்டக்கூறு** ஆ) இடக்கூறு இ) விலை கூறு ஈ) பொருள் கூறு

6. மேலாண்மை என்பது ஒரு:
**அ) கலை மற்றும் அறிவியல்** ஆ) கலை
இ) கலை அல்லது அறிவியல் ஈ) அறிவியல்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



7. சமூக சந்தைப்படுத்துதல் என்பது _______ உடன் தொடர்புடையது.
அ) சமூக மாற்றம் ஆ) சமூகம் இ) சமூக தீமை **ஈ) சமூக வகுப்பு**

8. தொழில் முனைவோர்க்கு உரித்தான பண்பு(கள்):
அ) நெளிவு சுளிவு ஆ) தன்னம்பிக்கை இ) துணிகர உணர்வு **ஈ) மேற்கூறிய அனைத்தும்**

9. நுகர்வோர் இயக்கத்தின் தந்தை யார்?
**அ) ரால்ப் நாடர்** ஆ) மகாத்மா காந்தி இ) ஜவஹர்லால் நேரு ஈ) ஜான் எப். கென்னடி

10. _______ ஆம் ஆண்டில் தேசிய பங்குச் சந்தை முதன்முதலாக புறத்தோற்றமற்ற பத்திரங்கள் வர்த்தகத்தைத் தொடங்கியது.
அ) 1997 ஆ) 1995 இ) 1998 **ஈ) 1996**

11. பசுமை சந்தைப்படுத்தல் _______ எனவும் அழைக்கப்படுகிறது.
அ) பரிந்துரை சந்தைப்படுத்தல் ஆ) சமூக சந்தைப்படுத்தல்
**இ) சுற்றுச்சூழல் சந்தைப்படுத்தல்** ஈ) கொரில்லா சந்தைப்படுத்தல்

12. வணிகத்தின் பரந்த சூழல் ஒரு _______ காரணியாகும்.
அ) சமாளிக்கக் கூடிய **ஆ) கட்டுப்படுத்த முடியாத**
இ) சமாளிக்க முடியாத ஈ) கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட

13. ________ பொருட்கள், சேவைகள், மூலதனம் மற்றும் உழைப்பு ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக தேசிய பொருளாதாரங்களுக்கு இடையில் தடைகளை அகற்றுவதால் ஏற்படும் விளைவுகளாகும்.
**அ) உலகமயமாக்கல்** ஆ) தனியார்மயமாக்கல்
இ) வெளிநாட்டு வர்த்தகம் ஈ) தாராளமயமாக்கல்

14. தேசிய நுகர்வோர் குறைதீர்ப்பு ஆணையத்தின் தலைவர்:
அ) இந்திய குடியரசுத் தலைவர்
**ஆ) இந்திய உச்ச நீதிமன்றத்தின் சேவை அல்லது ஓய்வு பெற்ற நீதிபதி**
இ) உயர் நீதிமன்ற நீதிபதி ஈ) பிரதம மந்திரி

15. மாற்றுச்சீட்டில் ஈடுபட்டுள்ள தரப்பினர்களின் எண்ணிக்கை:
**அ) 3** ஆ) 2 இ) 4 ஈ) 6

16. நவீன சந்தையியலின் இறுதியான நோக்கம்:
**அ) நுகர்வோர் திருப்தி** ஆ) அதிகமான இலாபம்
இ) சமுதாயத்திற்கு சேவை ஈ) குறைவான இலாபம்

17. ________ ன் உதவியுடன் இலக்குகள் அடையப்படுகின்றன.
அ) திட்டமிடுதல் **ஆ) செயலூக்கமளித்தல்**
இ) பணியமர்த்துதல் ஈ) கட்டுப்படுத்துதல்

18. முதல் நிலைச் சந்தை ________ எனவும் அழைக்கப்படுகிறது.
**அ) புதிய வெளியீடுகளுக்கான சந்தை** ஆ) மூலதனச் சந்தை
இ) மறைமுக சந்தை ஈ) பணச் சந்தை

19. பயிற்சி முறைகளை ________ மற்றும் ________ பயிற்சி என வகைப்படுத்தலாம்.
அ) வேலை பகுப்பாய்வு மற்றும் வேலை வடிவமைப்பு
ஆ) வேலை சுழற்சி மற்றும் வேலை செறிவூட்டல்
இ) உடல் மற்றும் மனம்
**ஈ) பணிவழி மற்றும் பணிவழியற்ற பயிற்சி**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



20. நாட்டில் ________ பங்குச் சந்தைகள் உள்ளன.

அ) 20 ஆ) 21 இ) 25 **ஈ) 24**

## பகுதி - II

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அதில் 30-வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும். 7x3=21**

21. மேலாண்மைக் கருவிகளைப் பட்டியலிடுக. **அத்தியாயம் - 1**
22. மூலதனச் சந்தை என்றால் என்ன? **அத்தியாயம் - 5**
23. ஊக வணிகர்களின் வகைகள் யாவை? **அத்தியாயம் - 7**
24. ஆட்சேர்ப்பின் பொருள் தருக. **அத்தியாயம் - 10**
25. சந்தையிடுகை கலவை - வரையறுக்கவும். **அத்தியாயம் - 14**
26. ஜான் F. கென்னடி கூறிய நுகர்வோர் உரிமைகள் யாவை? **அத்தியாயம் - 17**
27. பங்கேற்று நடித்தல் முறை என்றால் என்ன? **அத்தியாயம் - 12**
28. சரக்கு விற்பனை ஒப்பந்தம் என்றால் என்ன? **அத்தியாயம் - 21**
29. குறைவெண் என்றால் என்ன? **அத்தியாயம் - 28**
30. தொழில் முனைபவர் முடிவு எடுக்கும் திறனைப் பெற்றிருக்க வேண்டிய அவசியம் யாது? **அத்தியாயம் - 23**

## பகுதி - III

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 - க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 7x3=21**

31. மேலாண்மையின் முதன்மைப் பணிகளைப் பட்டியலிடுக. **அத்தியாயம் - 2**
32. இரண்டாம் நிலைச் சந்தை - குறிபபு வரைக. **அத்தியாயம் - 4**
33. கரடி ஊக வணிகரை விளக்குக. **அத்தியாயம் - 7**
34. மனித வளங்களின் இயல்புகள் எவையேனும் மூன்றினை எழுதுக. **அத்தியாயம் - 9**
35. தனியிடச் சந்தை பற்றி விளக்குக. **அத்தியாயம் - 15**
36. மாநில ஆணையத்தின் உறுப்பினர்கள் யாவர்? **அத்தியாயம் - 18**
37. மாற்று முறை மற்றும் உரிமை மாற்றம் இவைகளை வேறுபடுத்துக. (ஏதேனும் 3) **அத்தியாயம் - 22**
38. பங்குகளை முனைமத்தில் வெளியிடல் என்பது குறித்து நீவிர் அறிவது யாது? **அத்தியாயம் - 26**
39. டெய்லரின் மேலாண்மைத் தத்துவங்கள் யாவை? **அத்தியாயம் - 1**
40. "இந்தியாவில் தயாரிப்புத் திட்டம்" பற்றி குறிப்பு வரைக. **அத்தியாயம் - 25**

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7x5=35**

41. அ) நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரிக்கவும். **அத்தியாயம் - 1**

**(அல்லது)**

ஆ) வியாபாரத்தின் நுண்ணிய சூழல் காரணிகளை விளக்குக. **அத்தியாயம் - 19**

42. அ) மூலதனச் சந்தையின் பல்வேறு பணிகளை விளக்குக. **அத்தியாயம் - 5**

**(அல்லது)**

ஆ) மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் பிரச்சனைகளை விவரிக்கவும். **அத்தியாயம் - 23**

43. அ) செபியின் பணிகளை விவரிக்கவும். **அத்தியாயம் - 8**

**(அல்லது)**

ஆ) விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படை கூறுகளை விரிவாக விளக்குக. **அத்தியாயம் - 21**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



44. அ) ஆட்சேர்ப்பு முறைக்கும், தேர்ந்தெடுத்தலுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை விவரிக்கவும். அத்தியாயம் - 11

**(அல்லது)**

ஆ) பங்குகளுக்கும், கடனீட்டுப் பத்திரத்திற்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக. அத்தியாயம் - 28

45. அ) குறிப்பு வரைக: அத்தியாயம் - 28

i) சட்டமுறைக் கூட்டம்

ii) சிறப்புக் கூட்டம்

**(அல்லது)**

ஆ) நுகர்வோரின் பொறுப்புகள் யாவை? அத்தியாயம் - 17

46. அ) பொருளாதார அடிப்படையில் சந்தைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது என்பதை விளக்குக. அத்தியாயம் - 13

**(அல்லது)**

ஆ) நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள் என்பதை விளக்குக. அத்தியாயம் - 18

47. அ) காசோலையின் இயல்புகளை விளக்குக. அத்தியாயம் - 22

**(அல்லது)**

ஆ) பயிற்சியின் நோக்கங்களை விளக்குக. அத்தியாயம் - 12



www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com